பொதுசன நூலகம்

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM. NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 4 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 25 (16.04.2004) வெள்ளிக்கிழமை இதழ்:198

## மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில்

# யுத்தநிறுத்த உடன்படிக்கையினை தொடர்ந்து கடைப்பிடிக்க இணக்கம்!

### படையினர் – புலிகள் சந்திப்பில் முடிவு

(மட்டக்களப்பு)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு - போர்நிறுத்த உடன்படிக்கையை, தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கு, மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தரப்பும் - விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.**

**இராணுவத்தரப்புக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த இணக்கம் காணப்பட்டது.**

மட்டக்களப்பு நகரிலிருந்து வடமேற்காக 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வவுணதீவு பிரதேசசெயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு, சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே தலைமை வகித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் குழுவுக்கு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் தலைமை வகித்தார்.

இந்தக் குழுவில் மட்டு - அம்பாறை மாவட்ட பிரதி விசேட தளபதி ராம், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தளபதி ரமணன், ஜெயந்தன் படையணி சிறப்புத் தளபதி ஜெகாத்தன், சமாதான செயலக தொடர்பாளர் பவான், நாகேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவத்தரப்பில் 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்த்தன தலைமையிலான குழுவின் மட்டு 223 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)



சந்திப்பின் பின் தளபதி ரமேஸ்.



சந்திப்பில் பங்கேற்ற இராணுவ அதிகாரிகள்.

## கருணா பிரச்சினை முடிவுக்கு வந்தாலும்

# உடனடியாக சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு சாத்தியமில்லை

### இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள், கருணாவினால் எழுந்த கிழக்கு மாகாண பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளபோதிலும்- இனப்

தமது உயர் அதிகாரத்தை நிலைநாட்டினர்.

தாம் இந்த மாத இறுதிப்பகுதியில் சமாதான பேச்சுவார்த்தைகளை

ரான ஹரி குணதிலக இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையில் இருந்து இலங்கை தற்சமயம் கீழ் இறங்கி நிற்கிறது. அதேநேரம்- விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பில்லையென்றே



## இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள், கருணாவினால் எழுந்த கிழக்கு மாகாண பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளபோதிலும்- இனப் பிரச்சினைக்கான இணக்கப் பேச்சுவார்த்தை, உடனடியாக ஆரம்பிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் இல்லையென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள், கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சினையை தகர்த்து, கடந்த திங்கட்கிழமையன்று மீண்டும் அங்கு தமது உயர் அதிகாரத்தை நிலைநாட்டினர்.

தாம் இந்த மாத இறுதிப்பகுதியில் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா, புதுவருடத்துக்கு முன்னர் அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின் பவலிடம் தொலைபேசியில் உறுதிவழங்கியிருந்தார்.

இராஜதந்திர வட்டாரங்கள் இதனை ஜனாதிபதி சந்திரிகாவின் அதீத நம்பிக்கையென கருத்து வெளியிட்டுள்ளன.

பாதுகாப்புத்துறை ஆய்வாளரான ஹரி குணதிலக இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில், சமாதானப் பேச்சுவார்த்தைப் பாதையில் இருந்து இலங்கை தற்சமயம் கீழ் இறங்கி நிற்கிறது. அதேநேரம்- விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வாய்ப்பில்லையென்றே கருதவேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.- தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

அதேநேரம் தாம் கடந்த ஒக்ரோ

(12 ஆம் பக்கம் பார்க்க)



செய்தியாளர்களுடன் கண்காணிப்புக் குழுத் தலைவர்.

# மட்டக்களப்பின் பாதுகாப்பு நிலைமை; சிரேஷ்ட படையதிகாரிகள் ஆராய்வு!

உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று- நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து, அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக மதிப்பீடு செய்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தலைமையிலான இந்தக் குழுவில்- இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோர் உட்பட சிரேஷ்ட படையதிகாரிகள் பலரும் இடம்பெற்றிருந்தனர்.

இந்த உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு விமானம் மூலமாக மட்டக்களப்பு சென்று அங்கிருந்து வாழைச்சேனைக்கும், மின்னேரியாவுக்கும் விஜயம் செய்தது.

வாழைச்சேனையில் உள்ள பிரிகேட் தளத்தில் அந்தப் பகுதிக்கு பொறுப்பான கட்டளை அதிகாரியுடன் அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்த படையதிகாரிகள், பின்னர் மின்னேரியாவுக்கும் விஜயம் செய்தனர்.

மின்னேரியாவிலுள்ள 23 ஆவது டிவிசனின் தலைமையகத்தின் கட்டளையதிகாரி உள்ளிட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து இந்த சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு விரிவாக ஆராய்ந்ததாகவும் தெரியவருகிறது.

கருணாவின் தப்பியோட்டத்திற்கு பின்னரான பாதுகாப்பு நிலைமை குறித்து மதிப்பீடு செய்யவே சிரேஷ்ட படையதிகாரிகள் மட்டக்களப்புப் பகுதிக்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. (01)

## கருணாவுக்கு பாதுகாப்பா? இராணுவத் தரப்பு மறுப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து கருணாவையும், அவரது குழுவையும் கொழும்புக்கு பாதுகாப்பாக அழைத்துவந்ததாகக் கூறப்பட்டதை இராணுவம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக- பாதுகாப்பு அமைச்சின் சார்பாக, இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டார்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து- கருணாவும், அவரது குழுவினரும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாக, நேற்று செய்திகள் வெளிவந்திருந்தன. இது தொடர்பாக - பாதுகாப்பு அமைச்சு தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். கருணா இதுவரை தமது பாதுகாப்பு சம்பந்தமாக படையினரிடம் எந்தவித வேண்டுகோளையும் விடுக்கவில்லை. அவ்வாறான பொறுப்புக்களையும் நாம் ஏற்கவில்லை.

அத்துடன், அவர் தற்சமயம் எங்கிருக்கிறார் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# ...த. (உயர்தர) பரீட்சையில் தோற்றும் ...விஞ்ஞானபாட மாணவர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அதிபர்கள் சங்கத்தினால் கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவிலும், யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடனும், க.பொ.த (உயர்தர) விஞ்ஞானபாட மாணவர்களுக்கான மூன்றுநாள் இலவச மீட்டல் செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது.

இந்தமுறை க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் இதில் கலந்துகொள்ளமுடியும்.

எதிர்வரும் 19,20,21 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில்- யாழ்ப்பாணம், வலிகாமம், தீவக வலய மாணவர்களுக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில்- வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்கும் இந்தக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலங்கையின் விசேட திறமை வாய்ந்த விரிவுரையாளர்கள் அடங்கிய குழுவினராலேயே இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

செயலமர்வு நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 5.15 வரை மீட்டல் வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இந்தச்செயலமர்வில் கலந்துகொள்ளவிரும்பும் மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும், உரிய ஆவணங்களுடனும் சமுகமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தக்கருத்தரங்கில் இணைந்த கணிதத்தை எம்.பிறேம்நாத்தும், ஏ.குணசிங்கமும் நடத்தவுள்ளார்கள். இதேபோல் இரசாயனவியலை எஸ்.தில்லைநாதனும், வீ.இராஜதேவனும், பௌதீகவியலை எஸ். கணேசனும், எஸ்.குணசீலனும், உயிரியலை வீ.குகாதரனும், ஆர்.ஈஸ்வரதாசனும் க.பொ.த.(உயர்தர) பரீட்சைக்கு ஏற்ற வகையில் மீட்டல் செய்யவுள்ளனர்.

| | யாழ்ப்பாணத்தில் | | | நெல்லியடியில் | | |
|---|---|---|---|---|---|---|
| நேரம் | 1ஆம் நாள் | 2ஆம் நாள் | 3ஆம் நாள் | 1ஆம் நாள் | 2ஆம் நாள் | 3ஆம் நாள் |
| 8.30 மு.ப 10.30 மு.ப | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் | பௌதிகவியல் | பௌதிகவியல் | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் |
| 10.30 மு.ப 10.45 மு.ப | தேநீர் இடைவேளை | | | | | |
| 10.45 மு.ப 12.45 பி.ப | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் | பௌதிகவியல் | பௌதிகவியல் | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் |
| 12..45 பி.ப 01.30 பி.ப | மதிய போசன இடைவேளை | | | | | |
| 01.30 பி.ப 03.00 பி.ப | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் | பௌதிகவியல் | பௌதிகவியல் | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் |
| 03.00 பி.ப 03.15 பி.ப | தேநீர் இடைவேளை | | | | | |
| 03.15 பி.ப 05.15 பி.ப | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் | பௌதிகவியல் | பௌதிகவியல் | இரசாயனவியல் | இ.கணிதம், உயிரியல் |


விசேஷம்*
சுத்தமான நல்லெண்ணெய்
தரமான எள்ளில் சுகாதார முறைப்படி
தயாரிக்கப்பட்டது
A Product of Multll oil. Industries Limited Inuvil Srilanka.

நவநாகரிக ஆடைகளின்
உறைவிடம் மங்கை சில்க்ஸ்
நீங்கள் விரும்பும் டிசைன்களில்
தரமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
8, நவீன சந்தை,
சுன்னாகம்.





தென்னிந்திய நடனக் கலைஞர்களின்
நடன சங்கமும், நடன பயிற்சியும்

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகியவற்றை சென்னையை தளமாகக்கொண்ட உலகப்புகழ்பெற்ற தென்னிந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாட்களுக்கு யாழ்.மண்ணில் நடாத்த உள்ளோம். (04.05.2004 - 10.05.2004 வரை) மேற்படி நிகழ்ச்சியானது நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் பயின்றவர்களும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாஷேத்திரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டிகுச்சுப்புடி பயிற்சி நிலையம் முதலிய பள்ளிகளூடாககற்றுத் தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப்புகழ்பெற்ற அலமேலுவும் உஷா வசந்தகுமார், உண்ணிகிருஸ்ணன் பரதநாட்டியமும், ராஜேஸ், லக்ஸ்மி பிரியா குச்சுப்புடி, ஸ்ரீபாலசுப்பிரமணியம் கதகளி ஆகியோரும் அவர்களது நடனக் குழுவினர் இந்நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்க உள்ளார்கள். இந்த ஏழு நாள் நடனப்பயிற்சியில் (பரத நாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேரவிரும்பும் மாணவர்கள் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவு செய்யவும்.

பதிவு செய்யவேண்டிய முகவரி:
ரி.கே.ரூறிஸ்ற் இன்
பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 077 6143541, 021-222 5680




(சி-2466)

## நிகொட்டின் ஏற்பாட்டில்

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 90 இலட்சம் ரூபா பெறுமதியான கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பணியை இலகுவாக மேற்கொள்ள வசதியாக 90 இலட்சம் ரூபா செலவில் உறுதிப்படுத்தும் (Lapros Copy Unit) ஒன்று நிகொட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக அதன் திட்டமிடல் அதிகாரி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மக்களின் வைத்திய வசதியை மேம்படுத்தும் நோக்கின் அடிப்படையிலேயே இந்தக் கருவி வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இலங்கையின் பல மாவட்ட வைத்தியசாலைகளிலும் இந்த வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வைத்திய வசதி இலகுவாக்கப்பட்டுள்ளது. இதேபோல் - யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய வசதியை விருத்திசெய்து வைத்தியர்களினதும், நோயாளிகளினதும் சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருவிமூலம் சத்திரசிகிச்சைக்கு முன் சிகிச்சைக்குரிய பாகத்தையும் அதில் உள்ள தேவையையும் உறுதிசெய்ய முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - கடந்த மாதம் யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர் பயிற்சிக்கல்லூரியின் தேவைக்கென 24 இலட்சம் பெறுமதியான பேரூந்து ஒன்றையும், சில மருத்துவ பயிற்சி உபகரணங்களையும் நிகொட் நிறுவனம் வழங்கியுள்ளது.

இவ்வாறான சேவைகளின் மூலம் யாழ்.மக்கள் பெரிதும் நன்மையடைய முடியும் எனத் தான் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சதாவதானி கதிரவேற்பிள்ளை; 97 ஆம் ஆண்டு நினைவு நாள் விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 97 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு, நிலையத்தின் தலைவர் மு.தர்மலிங்கம் தலைமையில் சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

நாளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில்- யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் சி.சிவலிங்கராசா முதன்மை விருந்தினராகவும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி சி.புஸ்பலிங்கம் மற்றும் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் சரஸ்வதி சிவனருள் சுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் - சிறப்புச் சொற்பொழிவுகள், சிறுவர் இசை, நடன நிகழ்வுகள், வழக்காடுமன்றம், சப்தஸ்வரங்கள் இன்னிசை விருந்து ஆகியனவும் நடைபெறவுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

## மோட்டார் போக்குவரத்து ஆவணங்கள்

# பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகத்தின் பன்முகப்பட்ட செயற்பாட்டின்மூலம் மோட்டார் போக்குவரத்துடன் தொடர்புடைய மாற்றங்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து தொடர்புடைய பதிவுச்சான்றிதழ் நகல் பெறல், சாரதி அனுமதி அட்டை நகல்பெறல், சாரதி அனுமதி அட்டை பெறல், சாரதி அனுமதிப் புத்தகம் பெறல், சாரதி அனுமதி அட்டை மாற்றுதல், பதிவுச் சான்றிதழ் திருத்தங்கள் உடன் மேற்கொள்வதற்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பன் வைத்தியசாலை புனரமைக்கப்படவுள்ளது.

(யாழ்ப்பாணம்)

அம்பன் வைத்தியசாலை நிகொட் நிறுவனத்தின் செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் யாவும் யூன் மாதம் அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பன் வைத்தியசாலை கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் பெரும் சேதங்களுக்குள்ளான நிலையில் காணப்படுவதால் இதனைப் புனரமைக்க வேண்டிய தேவை மிக நீண்டகாலமாக இருந்துவந்துள்ளது.

எனினும், கடந்த ஜனவரி மாதம் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக நிகொட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்தே இந்த வைத்தியசாலை திருத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

மூன்று நபர்களை ஏற்றிவந்த மோட்டார் சைக்கிளும் வான் ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. சம்பவத்தின்போது நுணாவில் கிழக்கை சேர்ந்த அ.அருள்தாஸ் என்பவரே காயமடைந்தார்.

இவர் பின்னர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (34)


ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந்த் நடித்த
உன்னை பார்த்த நாள் முதல்...
10.30, 2.30, (பு. நே)
இன்று முதல்
6.30, 9.30 (பு.நே) விஜய், திரிஷா
நடித்த
கில்லி
(சி-2387)





நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R ரஹ்மானின்
இசையில்
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)





நிரஞ்சனாஸ் சங்கானை
தனுஷ், சோனியா, நாகேஸ்
நடித்த
காதல் கொண்டேன்
(சி-2386)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)

# இறுதிமுடிவின்றி முடிவடைந்த ஜே.வி.பி -சுதந்திரக்கட்சி சந்திப்பு

## இன்றும் நடைபெறும்

சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக் குமிடையில் அமைச்சர்கள் நியமனம் செய்வது தொடர்பாக எழுந்தள்ள முறுகல்நிலை குறித்து இரு கட்சிக ளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் இறுதிமுடிவுகள் எதுவும் எடுக்கப்படாது முடிவடைந்தது.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந் திப்பு - இரண்டு மணிநேரம் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் சார்பில் பிரசார செயலாளர் ரில்வின் சில்வா, கட்சியின் செயலாளர் விமல் வீரவன்ச, அரசியல் பிரமுகர் நந்தன குணதிலக ஆகியோரும் -

இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதற் காக நியமிக்கப்பட்ட குழுவின் சார் பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், டக்ளஸ் தேவா னந்தா, பேரியல் அஷ்ரப், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் விவசாய அமைச்சுடன், சுதந்திரக் கட்சியிடம் இருக்கும் மகாவலித்துறை மற்றும் சலாசாரத்துறையுடன் திரைப்படத் துறையையும் இணைப்பதில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட் டுள்ள முறுக்ல்நிலை குறித்தே பேச் சுக்கள் இடம்பெற்றன.


எனினும், இந்தச் சந்திப்பில் சில இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளபோதி லும் இன்று இந்த விடயம் குறித்து அடுத்தகட்டப் பேச்சுக்களை நடாத்து வது என்று முடிவு செய்யப்பட்டு, கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடை பெற்ற சந்திப்பில் சில விட யங்களுக்கு இணக்கம் காணப்படாத தால், அடுத்த சில தினங்களில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் தமது அமைச் சுக்களை பதவிப்பிரமணம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## மக்கள் வங்கி

# எக் காரணத்தைக் கொண்டும் தனியார் மயமாக்கப்படமாட்டாது!

## பிரதமர் ராஜபக்ஷ தெரிவிப்பு



எந்தச் சூழ்நிலை ஏற்பட்டபோதும் மக்கள் வங்கி எக்காரணம்கொண்டும் தனியார் மய மாக்கப்படமாட்டாதென, தெரிவித்துள்ளார் பிர தமர் மகிந்த ராஜபக்ஷ.

தங்காலையில் உள்ள மக்கள் வங்கிக்கிளை அலுவலகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புதுவருட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த மக்கள் வங்கியின் கிளைகள் அனைத தும் எடுக்கும் நடவடிக் கைகள் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்குச் சாதகமாகவேயுள்ளது. அத்துடன், இந்த வங்கியின் கடந்தகால சாத னைகளையும் பிரதமர் அங்கு நினைவுகூர்ந்தார்.

இதேவேளை, குருநாகல் மக்கள் வங்கிகிளையில் நடந்த புதுவருட நிகழ்வில் உரையாற்றிய வங்கியின் முகாமையாளர் - மக்கள் வங்கி இதுவரை காலமும் பல பின்னடைவுகளைச் சந்தித்தது எனவும், தற்போது இந்த நெருக்கடி நிலைகளிலிருந்து மீண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## பிரித்தானிய ஆணைக்குழு அலுவலகம் திறப்பு

பிரித்தானிய பொது ஆணைக் குழுவின் அலுவலகத்தின் விசாப் பிரிவு சாதாரண அன்றாட நடவடிக் கைகளுக்காக மீண்டும் 26 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

அவசர விசா நடவடிக்கைக ளுக்கு மட்டும் 2335806 அல்லது 2437336 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்புகொள்ள முடியு மென பிரித்தானிய பொது ஆணைக் குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## திறப்பு விழா


உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மையத் திறப்புவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் நூலகத்தைத் திறந்து வைக்கவுள் ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலைக ளில் மிகப்பெரிய நூலகமாக, சகல வசதிகளும் கொண்டதாக இந்த நூலகம் அமையுமென எதிர்பார்க்கப் படுகிறது. நூலக ஆக்கத்தில் அதி பர் கி.நடராஜா கடுமையாக உழைத்து வருகிறார் என்பது குறிப் பிடத்தக்கது. (116)

# நாட்டில் சிங்களவர்களே ஆட்சி அமைக்கவேண்டும்

## ஜனாதிபதியிடம் ஹெல உறுமய தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டில் அரசாங்கததை அமைப்பவர்கள் சிங்களவர் களாகவே இருக்கவேண் டும். மாற்று இனத்தவர்க ளுடன் இணைந்து அர சாங்கம் அமைக்கக்கூடாது.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதி சந்தி ரிகாவிடம் வலியுறுத்தியி ருக்கிறது.

இந்தத் தகவலை ஜாதிக ஹெல உறுமயவின் உயர்பீடத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய வண. எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் கண்டி தலதா மாளிகையில் வழிபாடு நடத் திய பின்னர் அங்கு பேசியபோது வண. எல்லாவல மெத்தானந்த தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில் -

தலதா மாளிகைக்குள் எமது வருகை தந்த வழிபாடுகளுக்கானதே தவிர, உத்தியோகபூர்வமான தல்ல. எமது நாட்டில் அரசமைப்பவர்கள் சிங்களவர் களாகவே இருக்கவேண்டும். சிறுபான்மையினர் எவருட னும் சேர்ந்து அரசமைக்கக்கூடாதென ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 105 ஆச னங்கள் கிடைத்துள்ளதால் அவர்கள் அரசாங்கம் அமைக் கலாம்.

எமது தர்ம ராச்சியப் பயணத்திற்கு மக்களின் ஆதரவு கிட்டியுள்ளது. எமது பயணம் தொடரும். எந்தவொரு கட்சியையும் சார்ந்திருக்காமல் மக்களின் நலனுக்காக அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகளில் ஒத்துழைப்போம் என வண. மெத்தானந்த தேரர் மேலும் தெரிவித்தார்.

## யோகாசன தியான வகுப்புகள்

நாவலர் மண்டபத்தில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணிமுதல் 5.30 மணிவரை பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப் பட்டு வருகின்றன.

அத்துடன் ஆண்களும், பெண்க ளுக்கும் எனத் தனித்தனியாக யோகாசன தியான வகுப்புக்களும் நடத்தப்படுவதுடன், நோயாளர்க ளுக்கான பிரத்தியேக தியான வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன. இதில் ஆவர்வமுள்ள எவரும் பங்கு பற்றலாம்.

## விசேட ஆங்கில வகுப்புகள்

யாழ். பல்கலைக்கழகத்தில் இம்முறை இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறத் தவறியவர் களுக்கு விசேட ஆங்கில வகுப்புக் கள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கிலபாடத்தில் சித்தியடை யாமல் பட்டம் பெறத் தவறியவர்க ளுக்கு என நடத்தப்படும் இந்த வகுப் புகள் - யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெறுகின்றது.

# நிபந்தனைகள் எதுவுமின்றியே போராளிகள் கையளிக்கப்பட்டனர்

## மட்டு. அரசியற் பொறுப்பாளர் கௌசல்யன்

தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் எவ்வித நிபந்தனைகளு மின்றி, கருணாவுடன் செயற்பட்டு வந்த போராளிகள் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர் என மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரி வித்தார்.

கதிரவெளி விக்னேஸ்வரா வித் தியாலயத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை 269 போராளி களை - அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்தவேளை, நிருபர் ஒருவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில ளித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழீழ தேசியத்தலைவர் பிர பாகரனின் பணிப்பின்பேரிலேயே இவர் கள் பெற்றோரிடம் அனுப்பி வைக் கப்படுகின்றனர். அவர்களுக்கு எவ் வித நிபந்தனைகளும் விதிக்கப்பட வில்லை.

கருணா என்னும் தனிமனிதனைத் தவிர மற்றைய எல்லோரும் எம்மு டன் வந்து இணைந்துகொள்ள முடி யும் அல்லது தமது சொந்தப் பிர தேசங்களுக்கு வந்து வாழமுடியும், அவர்கள் எதைப்பற்றியும் சிந்திக் கத்தேவையில்லை.

சுதந்திர உணர்வும், தாயகப் பற்றும் கொண்ட எவரையும் நாம் எம்முடன் இணைத்துக்கொள்வோம் எனவும் அவர் அங்கு மேலும் தெரி வித்தார்.

## பொதுஜன ஐக்கிய முன்னணியின்

# 66 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 60 பேருக்கு அமைச்சுப் பதவிகள்

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத்தேர்த லில் பொதுஜன ஐக்கிய முன்ன ணிக்குக் கிடைத்த 66 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 60 பேருக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து பொதுஜன ஐக்கிய முன்னணியினர் போட்டியிட்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 35 பேர் அமைச்சர்க ளாகவும், 35 பேர் பிரதியமைச்சர்க ளாகவும் அங்கம் வகிக்கின்றனர்.

இம்முறை தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் மாவட்ட அடிப்படையில் 56 ஆசனங்களும், தேசியப் பட்டியலில் 10 உறுப்பினர் களுமாக மொத்தம் 66 நாடாளு மன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள் ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் அமைச்சுப் பதவியில் 4 அமைச்சர்களும், 4 பிரதியமைச்சர்க ளுமே ஜே.வி.பிக்கு வழங்கப்பட் டுள்ளது. ஜே.வி.பியினர் தமது அமைச்சுப் பதவிகளை இதுவரை பொறுப்பேற்கவில்லை.

ஜே.வி.பி. சார்பில் மாவட்டரீதியில் 35 பேரும், தேசியப் பட்டியல் மூலம் மூவருமாக மொத்தம் 38 பேர் நாடா ளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளன.

## மேய்ப்புப்பணிச்சபை பொதுக்கூட்டம்

பருத்தித்துறை மறைக்கோட்ட மேய்ப்புப்பணிச்சபை பொதுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு சபைத் தலைவர் அருட்திரு ப.இருதயதாஸ் அடிகளாரின் தலைமையில் நடை பெறவுள்ளது.

பொதுக்கூட்டத்தில் பங்குபற்று வோருக்கு மதிய உணவு தயார் செய்வதற்காக தங்கள் பங்குத்தந் தைகளுக்கூடாகப் பதிவுகளை மேற் கொண்டு உறுதிப்படுத்துமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (13)

# வடமேல் மாகாணசபை தேர்தல் தபால்மூல வாக்களிப்பு இன்று!

(கொழும்பு)

வடமேல் மாகாண அமைச்சுக் கான தேர்தல் பிரசார நடவடிக் கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

கடந்த பொதுத் தேர்தல் காரணமாக இடைநிறுத்தி வைக் கப்பட்டிருந்த இந்த மாகாணசபைக் கான தேர்தல் பிரசாரங்களே தற் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

52 வடமேல் மாகாணசபை உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் வகையிலேயே இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலிருந்தே இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் நாலு இலட்சத்து ஐம்பதாயிரத்து ஏழு வாக்காளர்கள் மாகாணசபைத் தேர்தல்களின்போது வாக்களிக்க வுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து எழுபத்தொன்பதா யிரத்து 492 வாக்காளர்கள் தமது வாக்குகளை அளிக்கவுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 9 அர சியல் கட்சிகளும் 6 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடும் அதே வேளை, குருநாகல் மாவட்டத்திலி ருந்து 6 அரசியல் கட்சிகளும், ஒரு சுயேட்சைக்குழுவும் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

மாகாணசபைக்கான தபால் மூல வாக்களிப்பு இன்றும், பத்தொன்ப தாம் திகதியும் நடைபெறும் என மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஹேரத் தெரிவித்தார். (01)

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

# தாமதமின்றி கடவுச்சீட்டுக்கள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

எவ்வித காலதாமதமுமின்றி மக்கள் கடவுச்சீட்டுக்களைப் பெற் றுக்கொள்வதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு குடி யகல்வுத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக குடிவரவு, குடி யகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஜெகத் விஜய வீர தெரிவிக்கையில் -

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலு வலகத்தில் அல்லது ஒவ்வொரு மாவட் டச் செயலகத்திலும் இதற்கான விண்ணப்பப்படிவத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் கடவுச்சீட் டிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்ப தாரிகளுக்கான புகைப்படங்களை எடுப்பதுடன், மற்றும் வசதிகளையும் செய்கின்றது.

எனவே, மக்களை வெளியில் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப் படிவங் களை வாங்கவேண்டாமென நாம் கேட்டுக்கொள்கின்றோம். கடவுச்சீட்டு பெறுவதற்குத் தேவையான ஆவணங் கள் இருக்கும் பட்சத்தில் வெகுவிரை வாக அவற்றைப் பெற்றுக்கொள்ள லாம் எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

# அரட்டைப் பகுதி புனரமைப்புக்கு உலக வங்கியிடமிருந்து நிதியுதவி

(மட்டக்களப்பு)

நிக்கொட் நிறுவனத்தின் ஏற்பாட் டில் மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள ஏறாவூர் பிரதேசத்தின் அரட் டைப் பகுதி புனரமைக்கப்படவுள் ளது.

இதற்காக உலகவங்கியின் உத வியுடன் நிக்கொட் 57 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடந்தகால யுத்தத்தால் இந்தப் பிரதேசத்தில் இய்ங்கிய பாடசாலை கள், சனசமூக நிலையங்கள் மற் றும் பொது இடங்கள் என்பன சேத மடைந்துள்ளன. இதனைவிடவும் பிரதேசத்தில் வாழும் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிய மையில், இன்னமும் போர் அனர்த் தத்திலிருந்து விடுபடாத வர்களாகவே காணப்படுகின்றனர்.

இதனாலேயே இந்தப் பிரதேசம் புனரமைக்கப்பட இருப்பதாக நிக் கொட் அமைப்பைச் சேர்ந்த மட்டக் களப்பு மாவட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மேற்கிந்தியத் தீவுகள் - இங்கிலாந்து அணிகளின் இறுதி டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது



(அன்ரிகுவா)

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் அன்ரிகுவாவில் நேற்றுடன் முடிவடைந்த நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

முன்னதாக நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பின்னர் தனது ஐந்தாம்நாள் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 422 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. இதனால், இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி சார்பாக ட்ரஸ் கோதிக் 88, அணித் தலைவர் வோகன் 140, புட்சர் 61, நசார் ஹிசைன் 56, கிரஹாம் தோர்ப் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சர்வான், ஹின்ட்ஸ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், எட்வேட்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதலாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 751 ஓட்டங்களைப் பெற்று தனது ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது. இதில் லாரா மத்தியூ ஹைடனின் சாதனையை முறியடித்து ஆட்டமிழக்காமல் 400 ஓட்டங்களைப் பெற்று புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் இதே அன்ரிகுவா மைதானத்தில் வைத்து இங்கிலாந்துக்கெதிராக 375 ஓட்டங்களை லாரா பெற்றிருந்தார். தற்போதும் இதே மைதானத்தில் வைத்தே மீளவும் இங்கிலாந்து அணிக்கெதிராக 400 ஓட்டங்கள் என்ற சாதனையைப் புரிந்துள்ளார்.

இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 422 ஓட்டங்களையும் பெற்றது.

நான்கு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் முதல் மூன்று போட்டிகளையும் இங்கிலாந்து அணி வென்று தொடரை ஏற்கனவே கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லாரா படைத்த சாதனையை ஹைடன் மீண்டும் முறியடிப்பார்

## கூறுகிறார் அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட்



(சிட்னி)

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணித்தலைவர் பிரைன் லாரா இங்கிலாந்துக்கு எதிரான நாலாவது டெஸ்ட்டில் 400 ஓட்டங்களைக் குவித்து புதிய உலக சாதனை படைத்தார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு அவுஸ்ரேலிய வீரர் ஹைடன் 380 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. லாரா 1993 ஆம் ஆண்டு 375 ஓட்டங்கள் குவித்த சாதனையை ஹைடன் முறியடித்தார். தற்போது ஹைடனின் சாதனையை முறியடித்து லாரா புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த நிலையில் லாராவின் சாதனையை ஹைடன் முறியடிப்பார் என்று அவுஸ்ரேலிய அதிரடி ஆட்டக்காரரான அடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

ஹைடனின் சாதனையை ஆறு மாதங்களிலேயே லாரா முறியடித்துவிட்டார். இந்தச் சாதனையை ஹைடனால் முறியடிக்கமுடியும். எந்தச் சாதனையையும் முறியடிக்கக்கூடிய ஆற்றல் அவருக்கு இருக்கிறது. லாராவின் சாதனையை ஹைடன் மீண்டும் முறியடிப்பார் என கில்கிறிஸ்ட் கூறினார்.

ஒரு இனிங்ஸில் 400 ஓட்டங்களை லாரா எடுத்ததன் மூலம் தன்னாலும் 400 ஓட்டங்களை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க அணித் தலைவரும், தொடக்க வீரருமான ஸ்மித் கூறுகின்றார்.

# விளையாட்டு

# மாவட்ட மேசைப்பந்தாட்ட அணி போட்டிகள் மூலம் தெரிவு!

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தின் மேசைப் பந்தாட்ட ஆண், பெண் அணிகள் தெரிவு கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்கில் நடைபெற்றது.

முதலில் பெண்களுக்கான அணித்தெரிவு இடம்பெற்றது. இதில் 'பட்டபிளை' அணி, யாழ். பல்கலைக்கழக அணி, 'பமிலியன்' அணி என மூன்று அணிகள் பங்குகொண்டன. இவற்றுள் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் பமிலியன் அணியும் மோதின. இதில் 3:2 என்ற வெற்றி அடிப்படையில் பமிலியன் அணி சம்பியனானது.

ஆண்கள் அணித் தெரிவில் - திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம், மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டு அணி, யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. என்பன விளையாடின.

இறுதிப் போட்டியில் மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டு அணி, யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. அணி என்பன விளையாடியது. இதில் 3:2 என்ற வெற்றி அடிப்படையில் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு அணி சம்பியனானது.


அணிக்கான வீர, வீராங்கனைகளின் தரநிலைத் தரப்படுத்தலும் இடம்பெற்றது. இந்த வருட மாவட்ட அணி தெரிவு செய்யப்பட்டது.

ஆண்கள் அணியின் தரநிலைப்படி ஜே.மோகன், பா.ஜெயதாசன், இ.ஜெயசீலன் ஆகியோர் முதல் மூன்று நிலைகளிலும் பெண்கள் அணியில் ரி.பானுரேகா, எஸ்.சுகந்தி, ரி.கஜனி ஆகியோர் முதல் மூன்று நிலைகளிலும் தரப்படுத்தப்பட்டனர்.

இந்த அணி இம்முறை திருமலையில் இடம்பெறவுள்ள மாகாணப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

(205)

# பாகிஸ்தானுடனான இறுதி டெஸ்ட் இந்திய அணி வலுவான நிலையில்!



(ராவல்பிண்டி)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ராவல்பிண்டியில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மூன்றாம் நாளான நேற்று ஆட்டநேர முடிவின்போது பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இனிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது 4 விக்கெட்டுக்களை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நேற்றுத் தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 600 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ராகுல்ராவிட் சிறப்பாக விளையாடி 495 பந்துகளில் 1 சிக்ஸர், 34 பவுண்டரிகள் அடங்கலாக 270 ஓட்டங்களையும், கங்கூலி 77 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் 47, லக்ஸ்மன் 71, பட்டேல் 69 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்து வீச்சில் சொகைப் அக்தர் 3, டனிஸ் கனேரியா, இம்ரன் பர்கத் இருவரும் 2 விக்கெட்டுக்களையும், முகமது சமீன், பாசல் - இ.அக்பர் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் காயம் காரணமாக பாகிஸ்தான் அணியில் சொகைப் அக்தர், ஆசீம் கமல் இருவரும் விளையாடவில்லை.


பின்னர் நேற்றுத் தனது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி - ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான இம்ரன் பர்கத், தபீக் உமர் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தனர்.

தற்போது யாசீர் ஹமீட் 8, கம்ரன் அக்மல் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்து வீச்சில் பாலாஜி, பதான் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர். தற்போது இந்திய அணி பாகிஸ்தானைவிட 376 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.



# அமிர்தசரஸ் தொகுதியில் பா.ஜ.க. சார்பில் சித்து போட்டி



முன்னாள் கிரிக்கெட் வீரர் நவ்ஜோத் சிங் சித்து - பஞ்சாப் மாநிலத்தில் தேர்தலில் போட்டியிட சிரோமணி அகாலி தளத்தின் பாகல் பிரிவு ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பாரதீய ஜனதா கட்சியும் கிரிக்கெட் வீரர் சித்து தேர்தலில் போட்டியிட பச்சைக் கொடி காட்டியுள்ளது. இதற்காக அவர் தனது வங்கி உத்தியோகத்தர் பணியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் தொகுதியில் அவர் பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளராக போட்டியிடுவார் என்று கட்சி வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அமிர்தசரஸ் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் படியா போட்டியிடுகிறார். இவர் பஞ்சாப் மாநில அரசியல் நிலவரங்களை நன்றாகத் தெரிந்தவர்.

தொகுதியைப் பற்றி அனைத்து நிலவரங்களும் அவருக்குத் தெரியும். அதனால், அவருக்கு எதிராகப் போட்டியிடும் கிரிக்கெட் வீரர் சித்து அந்த அளவு அரசியல் நுணுக்கம் தெரியாதவர் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

# எதிர்த்துப் போட்டியிடும் முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்!

## ராம்ஜெத்மலானிக்கு வாஜ்பாய் கடிதம்

(புதுடெல்கி)

என்னை எதிர்த்துப் போட்டியிடும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ராம்ஜெத்மலானிக்குப் பிரதமர் வாஜ்பாய் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து சுயேட்சை வேட்பாளராக பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி போட்டியிடுகிறார். அவருக்கு நேசக்கரம் நீட்டியுள்ள வாஜ்பாய், ஜெத்மலானிக்கு எதிராக தாக்குதல் தொடுக்க வேண்டாம் என்றும் பாரதீய ஜனதா கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நேற்றுக் காஷ்மீரில் தேர்தல் பிரசாரம் செய்த பிரதமர் வாஜ்பாய் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

ராம்ஜெத்மலானி எனது 40 ஆண்டுகால நண்பர். ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் இருவரும் கைகோர்த்து பணிபுரிந்து இருக்கிறோம்.

நான் மீண்டும் போட்டியிடும் தொகுதியில் ஜெத்மலானியும் வேட்புமனுத்தாக்கல் செய்திருக்கிறார்.

நாங்கள் இருவரும் தீவிரமாக பங்குபற்றும் கடைசித் தேர்தல் இதுவாகத்தான் இருக்கும். எனவே ராம் தனது முடிவை மறுபரிசீலனை செய்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

அவர் முக்கியமாக கருதும் சிறுபான்மையோர் நலன் மற்றும் பாதுகாப்பு, பத்திரிகைச் சுதந்திரத்தில் நானும் எப்போதும் அக்கறை கொண்டவன்தான்.

தேர்தலுக்குப் பின் நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தப் பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும் என உறுதி அளிக்கிறேன்.

காஷ்மீர் பிரச்சினை இந்தியா-பாகிஸ்தான் உறவு போன்ற நாட்டின் அரசியல் சமூகப் பிரச்சினைகளில் ஜெத்மலானியின் சேவை மற்றும் பங்களிப்புப் பற்றி நான் நன்கு அறிவேன். இந்த விவகாரங்களில் அவருடைய அறிவுரைகளும் ஆலோசனைகளும் என்றும் மதிக்கப்படும்.

இந்தப் பிரசாரத்தின் போது ஜெத்மலானிக்கு எதிராக எனது கட்சியைச் சேர்ந்த யாரும் தாக்குதல் தொடுக்க வேண்டாம். இத்தகைய தாக்குதல்கள் நான் பொது வாழ்வில் கடைப்பிடித்து வரும் வழிமுறைகளுக்கு எதிரானதாகும்.

இவ்வாறு வாஜ்பாய் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

இந்த அறிக்கையில் ராம்ஜெத்மலானியை 'ராம்' என்றே உரிமையுடன் வாஜ்பாய் குறிப்பிட்டு இருக்கிறார்.

# தி.மு.க.வின் வெற்றிக்காக விரலை வெட்டிய தொண்டர்

சீர்காழி அருகே தி.மு.க. கூட்டணி வெற்றிக்காக அந்தக் கட்சித் தொண்டர் தனது சுண்டு விரலை வெட்டினார்.


சீர்காழி அருகே உள்ள நிம்மேலி கிராமத்தைச் சேர்ந்த விவசாய கூலித் தொழிலாளர் செல்வம் (வயது 28) இந்தக் கிராம தி.மு.க. அணிச் செயலாளராக இருக்கிறார்.

கிராமத்தின் வீதியில் அ.தி.மு.க தொண்டர் ஒருவர், அ.தி.மு.க. கூட்டணி 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்று கூறினார். இதைக் கேட்டுக் கோபமடைந்த செல்வம், தி.மு.க. கூட்டணிதான் வெற்றி பெறும் என்று ஆவேசமாகக் கூறியபடி, இடதுகை சுண்டு விரலை அரிவாளால் வெட்டினார்.

இதனால், விரல் துண்டானது. அருகிலிருந்தவர்கள் உடனே அவரை மருத்துவமனையில் சேர்த்தனர்.

கடந்த மாதம் அ.தி.மு.கவின் தேர்தல் வெற்றிக்காக சேலத்தைச் சேர்ந்த ஏட்டு ரத்தினம் என்பவர் தனது 3 விரல்களையும், வள்ளியூரைச் சேர்ந்த கணேசன் என்பவர் தனது இரண்டு விரல்களையும் துண்டித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் வாக்குப்பலத்தால்
# விடுதலைப்புலிகளின் அரசியல் பிரவேசம்
# சரியானதென மக்கள் தெளிவாக்கியுள்ளனர்
## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியாக எமக்களித்த பங்களிப்பைப் பாதுகாத்தவர்கள் எமதுமக்கள். அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசம் சரியானதெனத் தமது வாக்குப்பலத்தால் தெளிவாக்கிவிட்டார்கள். இந்தநிலை மாறாது பலம்மிக்க அந்தச் சக்திக்கு விசுவாசமாக இருக்கவேண்டியது எமது கடமை என, கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவநேசன் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகிய இவருக்கு அந்தப்பகுதி மக்களால் நேற்று முன்தினம் பாராட்டு வைபவமொன்று நடத்தப்பட்டது. இந்த வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் தொடர்ந்து பேசுகையில்-

தமிழீழ விடுதலைப்போரில் எமது பிரதேச மக்கள் பெரும்பங்களிப்புச் செய்துள்ளனர். அத்துடன், தமிழரின் கலை, பண்பாடு, கலாசாரத்தைப் பேணிப்பாதுகாப்பதிலும் தமது பங்கைக் குறைவின்றி வழங்கி வருகின்றனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டவர்களில் 22 [illegible] நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியிருப்பது மாபெரும் வெற்றியே. தனிப்பட்ட எனது வெற்றிக்கு எமது மக்கள் முழுமூச்சாகப் பாடுபட்டுள்ளனர். அந்தவகையில் ஒட்டுமொத்தமாகத் தமிழ்ச் சமூகத்துக்கும், என்னைச் சார்ந்த மக்களுக்கும் என்றும் விசுவாசமும், நன்றியுமுடையவனாக இருப்பேன்.

தேர்தல் காலங்களில் எமது பிரதேச மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்வதை நான் கண்கூடாகக்கண்டு கண்ணீர்விட்டிருக்கின்றேன். இவர்கள் வாழ்வு நிச்சயம் வளம்பெறும். அத்துடன் - எனது வெற்றிக்காகப் பெரும் பங்களிப்புச் செய்த கிளிநொச்சி வாழ் மக்களுக்கும், எனது ஆதரவாளர்களுக்கும் நான் நன்றியுடையவனாக இருப்பேன் எனத் தெரிவித்தார்.

கூட்டத்திற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசனுக்குத் தமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். (13)




யாழ்.நூலகத்திற்கு கொழும்பு லயன்ஸ்கழகத்தினரால் நேற்று ஒருதொகைப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. லயன்ஸ்கழக அங்கத்தவர் ஜே.எவ்.சரத் குணசேகரவிடமிருந்து யாழ்.மாநகர ஆணையாளர் அவற்றைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## காணாமல் போனோர் தொடர்பாக
# விரிவான அறிக்கையொன்றை வெளியிட சர்வதேச தொண்டர் அமைப்புகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு பின்னர் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற பல்வேறான கைதுச் சம்பவங்களையடுத்து, காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை அறிக்கையொன்றினை வெளியிட சர்வதேச தொண்டமைப்புகள் சில முற்பட்டுள்ளன.

குறிப்பாக 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன தமிழ இளைஞர், யுவதிகள் தொடர்பாகவும், அதேபோன்று படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் குடாநாடு இருந்த காலப்பகுதியில் காணாமல்போன இளைஞர், யுவதிகளின் நிலை தொடர்பாகவும் வெளிக்கொணரவே, இந்த விசாரணை அறிக்கையினை இந்த அமைப்புகள் வெளியிட முற்பட்டுள்ளனர்.

முக்கியமாக படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமல்போன இளைஞர், யுவதிகள் உள்ளிட்ட காணாமல்போன அனைத்து தரப்புகள் தொடர்பாகவும், உண்மைகளை வெளிக்கொணரவும் ஏதுவாகவே இந்த விவரண அறிக்கை நூல் வடிவில் வெளிவரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகமும் இந்தப் பணிகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதும், அவர்கள் தரப்பிலிருந்து இந்தச்செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.(202)

## முகமாலைச் சோதனைச்சாவடி ஊடாக
# போலி அடையாள அட்டையுடன் வந்த நபர் பொலிஸாரால் கைது!

(முகமாலை)

போலியான ஆள் அடையாள அட்டையுடனும், விடுதலைப் புலிகள் அணியும் இலக்கத்தகடு ஒன்றுடனும் முகமாலைச் சோதனைச் சாவடியூடாக யாழ்.குடாநாட்டினுள் நுழைய முற்பட்ட இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அந்த இளைஞன் தான் எடுத்து வந்திருந்ததாகக் கூறப்படும் பொதி ஒன்றினை - முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியில் வைத்து படையினர் சோதனைக்குள்ளாக்கினர். அந்தவேளையிலேயே குறித்த பொதியினுள் விடுதலைப் புலிகள் பேராளிகள் அணியும், இலக்கத்தகடு ஒன்றையும் படையினர் கண்டெடுத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பாக ஒன்றுக்கொன்று முரணான தகவல்களைக் குறித்த இளைஞன் விசாரணைகளின்போது தெரிவித்ததையடுத்து, கொடிகாமம் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக அவர் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பின்னர் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இந்தச் சந்தேக நபரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதறகான உத்தரவை சாவகச்சேரி நீதிவான் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞன் சுகவீனமுற்ற உறவினர் ஒருவரை பார்வையிடவே தான் யாழ். வந்ததாக விசாரணையின்போது தெரிவித்தார். (202)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள்

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் சகல தபால் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு, நேற்று முதல் அவை உரியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை - தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது மீள்திருத்தத்திற்கான விண்ணப்பப்படிவங்களை மே மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (24)

# தேர்தல் உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு சுற்றறிக்கை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது தேர்தல் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றியோருக்கான கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கையைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் வெளியிட்ட 2004-24 ஆம் இலக்க சுற்றுநிருபப்படி பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் எனத் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபட்ட சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 1200 ரூபாவும், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு 600 ரூபாவும் எழுதுனருக்கு 600 ரூபாவும் சிற்றூழியருக்கு 500 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

வாக்கு எண்ணும் கடமையில் ஈடுபட்ட பிரதான வாக்கெண்ணும் அதிகாரிக்கு 1500 ரூபாவும், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவருக்கும், எழுதுனருக்கும் 900 ரூபாவும், சிற்றூழியருக்கு 600 ரூபாவும் வழங்கப்படும்.

தேர்தல் தினத்திற்குமுன் வாக்குப்பெட்டி விநியோகித்தல்,. வாக்கெடுப்பின் பின் வாக்குப்பெட்டியை மீளப்பெறும் கடமையில் ஈடுபட்ட உதவித் தெரிவித்தாட்சி அலுவலருக்கு - நாளொன்றுக்கு 400 ரூபாவும், கனிஷ்ட, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுவிளைஞர்களுக்கு நாளொன்றுக்கு 200 ரூபா வீதம் செலுத்தப்படும்.

இவைதவிர வலய உதவித் தெரிவித்தாட்சி அலுவலருக்கு வாக்களிப்புத்தினத்திற்கும், அதன் முதல் நாளுக்குமென 1200 ரூபா வழங்கப்படுமெனவும் அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

# தேசிய பயிற்சிப் பாசறை நிகழ்வில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் சம்பியன்

மக்கள் நலன்புரி சங்க படையணியினால் நடத்தப்பட்ட பயிற்சிப் பாசறை நிகழ்வுகள் கடந்த வியாழக கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைவரை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்றது.

35 பாடசாலைகளைச் சேர்ந்த 350 தொண்டர்களைக்கொண்டு நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பாசறையின் முதலாம் நாள் நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அத்துடன் - தொண்டர்கள் சமுதாயத்தில் செய்யவேண்டிய கடமைகள் தொடர்பான செயல்முறைப் பயிற்சி போன்ற உள்ளக, வெளியகப் பயிற்சிகளும் இடம்பெற்றன.

இந்தப் பயிற்சிப் போட்டிகளில் கூடிய புள்ளிகளைப் பெற்று - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத்தையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், கொக்குவில் இந்துக்கல்லூரி மூன்றாம் இடத்தையும், மல்லாகம் மகா வித்தியாலயம் நான்காம் இடத்தையும், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளது.

அத்துடன் - மக்கள் நலன்புரிச் சங்கப்படையணிகளால் - விசேட முதலுதவிப் படையணி உறுப்பினர்களைக்கொண்டு யாழ்.மாவட்டத்துக்கென ஒரு பாண்ட் அணியினரும் உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவும், அங்குரார்ப்பண நிகழ்வும் முதல்நாள நிகழ்வின்போது நடத்தப்பட்டது.

## மட்டுவிலில் சிலபகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் தெற்கு, மட்டுவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு போன்ற பகுதிகளுக்கு இதுவரை மின்விநியோகம் மேற்கொள்ளப்படாமை குறித்து அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இது குறித்து மேற்படி மூன்று கிராமங்களையும் சேர்ந்த மக்கள் இலங்கை மின்சாரசபையின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

## வடமராட்சிப் பகுதியில்
# கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுகின்றனர்

வடமராட்சிப் பகுதியினுள் மர்மமான முறையில் இரவு வேளைகளில் நடமாடிவரும் சில வாகனங்கள் தொடர்பாக மக்களிடையே அச்ச நிலை தோன்றியுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்காகப் பாடுபட்டவர்களைப் பழிவாங்கவும், அச்சுறுத்தவும் முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெறுகிறது.

ஓட்டோ மற்றும் ஹைஏஸ் ரக வான் ஒன்றில் வரும் ஆயுதபாணிகளான சிலரே, இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வடமராட்சி கிழக்கில் வியாபாரி மூலைப்பகுதியில் வீடுகளுக்குள் அத்துமீறிப்பரவேசித்த இந்த ஆயுதபாணிகள் - அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்றவேளை தாங்கள் பயணித்த வாகனங்களைக் கரையோரப்பகுதிகளில் உள்ள இராணுவக் காவலரண் பகுதிகளில் நிறுத்தியிருந்ததாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் வல்வெட்டித்துறை மற்றும் துன்னாலைப் பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. (202)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றுவரும் ஆன்மக நிகழ்ச்சித்தொடரில் இன்று மாலை 5.30 மணிக்கு "பாடும் பணி" எனும் விடயம் தொடர்பாக சைவப்புலவர் இராசையா ஸ்ரீ[illegible]ன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.





இரண்டாவது அகவையில்



பெயர் : அ.சஞ்ஜீவ்
முகவரி : 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஏழாவது அகவையில்



பெயர் : ந.ஹரிகரன்
முகவரி : 1 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்



# சிநேகிதியே

ஆறுகால்மடத்தின் கிராமசேவையாளராகக் கடமையாற்றுகின்ற செல்லத்துரை சகுந்தலாதேவியை நேர்காணல் ஒன்றுக்காகச் சந்திக்கச்சென்றோம். அவர் எம்முடன் பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

என்னுடைய பதின்மூன்று வயதில் எங்களைவிட்டு தந்தையார் பிரிந்து சென்றுவிட்டார். தந்தையார் சென்றதன் பின்னர், என்னுடைய சகோதரர்கள் இருவரும் தங்களுடைய போக்கில் சென்றுவிட்டனர். அதன் பின்னர், நானும் எனது தம்பியும், தாயுமாக மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்க்கையை நடத்திவந்தோம்.

எனது வீட்டுக்கு அயலிலுள்ள வீடுகளிலுள்ள மாணவர்களுக்குத் தமிழ், கணிதம் முதலான பாடங்களைக் கற்பித்து வருகின்ற சொற்ப பணத்திலும், பல்வேறு விதமான வேலைகளைச் செய்தும், நாங்கள் வாழ்க்கையைச் செலுத்தி வந்தோம்.

சிலவேளைகளில் ஒரு மாதத்தில் ஒரு நாள் சோறு சாப்பிடுவதுகூட கஷ்டமாக இருந்தது. எமது தந்தை 26 வருடங்களுக்கு பின்னர் எங்களிடம் திரும்பிவந்தார்.

மூன்றரை வருடமாக அவர் படுத்த படுக்கையிலேயே இருந்ததால் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தோம். அவருக்கு சகல விதமான பணிவிடைகளையும் செய்து கவனித்துவந்தேன்.

அப்பாவும் இறந்துவிட்டார். பின்னர் 1986 ஆம் ஆண்டில் தம்பிக்கு கிராம சேவையாளர் பதவிகிடைத்தது. இந்திய இராணுவத்தினரால் 1989 ஆம் ஆண்டு எனது தம்பி சுட்டுக்கொல்லப்பட்டார். எனக்கு இருந்த ஒரேயொரு ஆண் துணையான தம்பியையும் இழந்து நான் மிகவும் கவலைக்குள்ளானேன்.

நானும் எனது தாயும் வீட்டில் தனித்துவிட்டோம். அப்போது அரச அதிபராக இருந்த மாணிக்கவாசகரைச் சென்று சந்தித்தோம். அவர், தம்பி இறந்தபின் எமக்கு ஏதேனும் உதவி செய்யவிரும்பினார். 1992 ஆம் ஆண்டில் கிராம சேவையாளர் பரீட்சை நடைபெற்றது. அதை எழுதுமாறு கூறினார். நானும் எழுதினேன். எனக்கு அதன் மூலமாக கிராமசேவையாளர் பதவி கிடைக்கும் என எதிர்பார்த்தேன். அந்தக் காலத்தில் மாணிக்கவாசகர் எனக்கு மிகவும் உதவியாக இருந்தார். ஆனால், அவர் எனது வேலை தொடர்பாகக் கதைத்து வருவதாககூறி கொழும்புக்குச் சென்றார். திரும்பி வரவில்லை. கொழும்பில் அவர் இறந்துவிட்டார்.

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் காரணத்தால் மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து சென்றனர். நான் எனது அம்மாவுடன் ஒரு இடமும் போகாமல் வீட்டில் இருந்தேன்.

இடம்பெயர்வின் காரணமாக வெளிக்கிடாமல் வீட்டில் இருந்ததால் மிகவும் கஷ்டத்துக்குள்ளானோம்.

வீட்டில் இருந்த காலத்தில் கிராமசேவையாளர் நியமனம் கிடைத்தமை பற்றிய தகவல் எனக்குக் கிடைத்தது.

நான் ஒரு அரசாங்க உத்தியோகம் பார்கக வேண்டும் என்கின்ற விருப்பம் மனதில் இருந்தது. அந்த விருப்பம் நிறைவேறிவிட்ட சந்தோஷச் செய்தியை அப்போது அரசாங்க அதிபராக இருந்த இராமலிங்கம் எனக்குத் தெரிவித்தபோது மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

நான் கடமையேற்ற கிராமசேவையாளர் பிரிவு மிகவும் கஷ்டப்பட்ட பிரதேசம். அங்கு பணியாற்றுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு சங்கக்கடை ஒன்றினை எனது பிரிவில் ஏற்படுத்தி, அதன்மூலம் நிவாரணங்களை வழங்க ஏற்பாடு செய்தேன்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் பணம் - வங்கிக்கணக்கு இருந்தாலே வழங்கப்பட்டது. எனவேநான், இதில் மக்களுக்கு வங்கிக் கணக்கை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தேன்.



செ.சகுந்தலாதேவி

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைக்குரிய படம் எடுப்பதற்கு, எனது கிராமசேவையளர் பிரிவிலுள்ள மக்களை அழைத்து, படத்தை எடுத்து அடையாள அட்டை பெற உதவினேன்.

## கல்வியை மதிக்கின்ற சமுதாயத்தின் மூலமாகவே எதிர்காலத்தில் நல்லதொரு சந்ததியை உருவாக்கலாம்

இந்த வேலை கிடைத்து எட்டு வருடங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் எனது பிரிவிலுள்ள மக்கள் எவரும் கச்சேரிக்குச் செல்லவில்லை. கச்சேரிக்குச் சென்று செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் நானே எனது அலுவலகத்திலிருந்து செய்வதற்கு வசதி ஏற்படுத்திக்கொடுத்தேன்.

நான் அலுவலகத்தில் எப்போதும் இருப்பதில்லை. கிராமமக்களின் வீடுகளுக்குச் சென்று மக்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்து தீர்த்துக்கொள்வேன்.

ஒருமுறை சமூகவிரோதச் செயல் ஒன்றினை நேரடியாகச் சென்று கட்டுப்படுத்தினேன். கசிப்புக் காய்ச்சுகின்ற வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு நபர் பற்றிய தகவல் அறிந்ததும், அங்கு நேரடியாகச் சென்று கசிப்புக் காய்ச்சுவதை நிறுத்தி காய்ச்சுவதற்கான பொருட்களைக் கைப்பற்றி கசிப்புக் காய்சியவரையும் மன்னிப்புக் கேட்கச்செய்தேன். அவருக்கு குறைந்தளவு தண்டனையையும் பெற்றுக்கொடுத்தேன்.

இப்படிப் பல்வேறு கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி சமுதாய சீரழிவிலிருந்து காப்பாற்ற உதவினேன்.

1997, 1998 ஆம் ஆண்டளவில் பல இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்றில் குற்றவாளிகளை இனங்காண உதவினேன்.

கசிப்புக் காய்ச்சுதல், களவெடுத்தல், விபச்சாரம் செய்தல் என்று குறிப்பிட்ட சில குடும்பங்கள்தான் செயற்பட்டுவந்தன. அவற்றை இனங்கண்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்கி, அவற்றிலிருந்து நீங்குமாறு கூறினேன. அவர்களும் திருந்தி வருகிறார்கள்.

என்னுடைய கிராமசேவகர் பிரிவிலுள்ள பலபேருக்கு பிறப்பு அத்தாட்சீப் பத்திரமோ, திருமணப் பதிவுச் சான்றிதழோ இருக்கவில்லை. இதனால் பல சிரமங்களை அவர்கள் அனுபவித்தனர்.

பாடசாலைக்குச் செல்லாமல் பிள்ளைகளும் விளையாடிக்கொண்டு திரிந்தனர். இதனால், மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. இத்தகையவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுத்து, அவர்கள் பாடசாலை செல்லவும் பல உதவிகளைப் புரிந்துள்ளேன்.

மக்களுக்கு நியாயமாகச் செய்யவேண்டிய பணிகளை, எவரது அழுத்தத்திற்கும் பணியாது செய்துவருவேன்.திருமணம் முடித்த பெண்களைச் சில கணவன்மார் வெளியில் விடுவதில்லை என்பது ஒரு மந்தநிலையைத் தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடு என்றுதான் நான் கருதுவேன். இவை ஆரோக்கியமான ஒரு சமுதாயத்திற்கு உகந்ததல்ல.

வேலைக்குச் செல்கின்ற பெண்கள் குடும்பத்தையும் பார்க்கவேண்டும். அலுவலகத்தையும் பார்க்கவேண்டும். இரண்டு பொறுப்புக்கள் அவர்களது தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது.

ஆண்கள் தரப்பில் அவர்களது பெற்றோர் சீதனம் கேட்பதில் பிழையில்லை என்றே கருதுகின்றேன். ஏனெனில் அவர்கள் தமது பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு செலவழித்துப் படிப்பிக்கின்றார்கள். அவர்கள் கட்டாயம் சீதனம் கேட்டேயாக வேண்டும்.

கஷ்டப்பட்ட பிரதேசத்தில் வேலை செய்வது என்பது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ஏனென்றால் நானும் கஷ்டத்தை அனுபவித்தே இந்த நிலைக்கு வந்திருக்கிறேன். கஷ்டம் என்றால் என்ன என்று எனகசு நன்றாகத் தெரியும்.

என்னுடைய சிறுவயதிலிருந்து மிகுந்த கஷ்டங்களை அனுபவித்துவருகிறேன். என்னுடைய வாழ்வில் பல்வேறு விதமான இழப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டே வந்துள்ளன. அவற்றையெல்லாம் சமாளித்து, எனது வாழ்க்கையை நடாத்திக் கொண்டுவருகிறேன் என்று கூறினார்.

பொதுவாகக் கல்வியை மதிக்கின்ற சமுதாயம் உருவாகவேண்டும். அதன் மூலமாகத்தான் நல்லதொரு எதிர்காலச் சந்ததியை எதிர்பார்க்கலாம். ஆடம்பர வாழ்க்கையை விடுத்து எல்லோரும் தத்தமக்குரிய ஒழுக்கங்களையும் கடமைகளையும் உணர்ந்து செயற்பட்டால் ஒவ்வொருவருக்கும் வெற்றி நிச்சயமானது.

நேர்காணல் - செல்வா.

# அலுவலகப் பெண்கள் அழகுடன் மிளிர...

பெண்களுக்குத் தன்னம்பிக்கை தருவதில் அழகுக்கும் பங்குண்டு. அலுவலகம் செல்லும் பெண்கள் முக அழகு மட்டுமல்ல, உடல்ழகையும் நன்றாக பராமரிப்பது அவசியம்.

பெண்களுக்கு அழகு இருந்தால், தன்னம்பிக்கையும் தானாக வந்து ஒட்டிக்கொள்ளும் என்கிறார்கள் பிரபல அழகுக்கலை நிபுணர்கள்.

வேலைக்குப்போகும் பெண்கள் அழகுடன் மிளிர்வதற்கான அழகு இரகசியங்களை எடுத்து நோக்குவோம் -



**கருவளையம் நீங்க**

பத்து ரோஜா இதழ்களை சூடானநீரில் போட்டு அந்த நீரினால் கண்களைச்சுற்றி உள்ள கருவளையத்தின் மேல் பூசியபின் முகத்தை கழுவ வேண்டும். இதனால் முகம் பொலிவு பெறுவதுடன் கருவளையமும் நீங்கிவிடும்.

**கண் எரிச்சலைப் போக்க**

கண் எரிச்சல் அதிகமாக இருந்தால் கண்களுக்கு மஸ்கரா போட்டுக்கொண்டு சோர்வைப் போக்கலாம். அல்லது வெள்ளரிக்காயை வெட்டி கண்ணில் வைத்துக் கொள்ளலாம்.

வாகனங்களில் செல்லும்போது பருத்தித்துணியை தலையில் கட்டிக் கொண்டபின், அதற்கு மேல் ஹெல்மெட் (தலைக்கவசம்) அணியலாம். வாகனப்புகையால் ஏற்படும் கண் அழுக்கு, கண் எரிச்சலைப் போக்க கண்ணாடி (கூலிங்கிளாஸ்) அணிந்து கொள் ளலாம்.

**கறுத்த உதடு சிவப்பாக மாற**

பாலைக் காய்ச்சும்போது, மேலே பாலாடை மிதந்து வரும். அதை எடுத்து நெல்லிக்காய்ச் சாறு 5 சொட்டுக் கலந்து தினமும் உதடுகளில் பூசி வந்தால், உதட்டின் கருமை நிறம் மறைந்து சிவப்பு நிறம் கிடைக்கும்.

அதேபோல உப்பு கலக்காத வெண்ணையை எடுத்து, அதில் ஒரு கரண்டி தோடம் பழச்சாறு கலந்து உதட்டில் தடவவும். இப்படிச் செய்வதால் உதட்டு வெடிப்பு நீங்கி மென்மையாகவும், மற்றவர்களை ஈர்க்கும் விதத்தில் கவர்ச்சியானதாகவும் மாறிவிடும்.

**மென்மையான நகம்**

தேன் அல்லது கிளிசரின் ஒரு தேக்கரண்டி எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் நகங்கள் படுமாறு கைகளை நனைக்கலாம். இதனால் நகத்தை சுற்றி இருக்கும் தேவையற்ற சதைகள் நீங்கும்.

**பாத வெடிப்பு உடனே மறைய**

அதிக சொர சொரப்பான பித்த வெடிப்புப் பாதங்களை உடையவர்கள் - வசலின் அல்லது பெற்றோலியம் ஜெலியை இரவில் தூங்குவதற்கு முன் பாதங்களில் தடவலாம். இல்லை எனின் மஞ்சளை அரைத்து காலில் தடவினால் இரண்டொரு நாளில் பலன் கிடைக்கும்.

# பெற்றோர்களே குழந்தைகள்மீது கவனம் செலுத்துங்கள்



குழந்தைகளைக் குறை சொல்லி மனக்கசப்பை ஏற்படுத்தும் பெற்றோர்களே - தயவுசெய்து ஒரு நிமிடம் சிந்தியுங்கள். சற்று கீழேயுள்ள யோசனைகளை அனுசரித்துப் பாருங்கள். மாற்றம் தென்படும் தவறுகள் குழந்தைகள்மீது மட்டுமல்ல என்பது புரியும். உங்கள் மனக்கவலை தீரும்.

- முதலில் பெற்றோர்கள் அதிகாலையிலேயே எழுந்திருக்கவேண்டும். குழந்தைகளையும் எழுப்பிவிடவேண்டும்.
- காலை எழுந்தவுடன் சமையல் வேலைகளில் அவசரம் காட்டாமல் பதட்டப்படாமல் செய்யவேண்டும்.
- பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும்வரை அவர்கள்மீது அக்கறையுடன் இருங்கள். நீங்கள் கோபம் அடைவதோ, பதட்டம் அடைவதோ கூடாது.
- பிள்ளைகளை வெளியே அனுப்பியது முதல் - மாலையில் வீட்டுக்கு வரும் வரை ஒரேயடியாக தொலைக்காட்சியுடன் இருக்காமல், நேரத்தை ஒதுக்கி காத்திருக்கும் வேலைகளை முடித்துக்கொள்ளவேண்டும்.
- தேவையற்று அடிக்கடி வெளியே போகவோ... பக்கத்து வீட்டுக்காரர்களுடன் அரட்டை அடிப்பதையோ நிறுத்திவிட்டு, பயனுள்ள வேலைகளை செய்வது மிகவும் சிறந்தது.
- பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையில் அதிக இடைவெளி இல்லாமல் இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். அதாவது, மனம்விட்டு நண்பர்கள்போல பேசிக்கொள்ள வேண்டும்.
- கணவன் - மனைவி எதற்கெடுத்தாலும் மோதிக்கொண்டு சத்தம் போடுவதை தவிர்க்கவேண்டும். இதனால் பிள்ளைகள் மனத்தாக்கத்திற்குள்ளாவார்கள்.
- குழந்தைகள்மீது தேவையில்லாமல் எடுத்ததுக்கெல்லாம் எரிந்து விழக்கூடாது.
- அடுத்த வீட்டுப் பிள்ள்ளைகளை உதாரணம் காட்டியும், ஒப்பீடு செய்தும் கண்டிக்கக்கூடாது.
- குடும்பப் பிரச்சினையின்போது எழும் கோபத்தைக் குழந்தைகளிடத்தில் காட்டாதீர்கள்.

# பிஞ்சுமுகத்தின் தேடல்

திடீரெனக் கேட்ட வெடிச்சத்தம் எனது தூக்கத்தைக் குழப்பிவிட, வாரிச் சுருட்டிக் கொண்டு எழும்பினேன். இன்னமும் விடிய வில்லை. ஆனால், எங்கள் வீட்டில் பகல் போல வெளிச்சமாக இருந்தது. அம்மா எல்லா லைற்றையும் போட்டுவிட்டிருந்தாள். நான் மெல்லக் கட்டிலைவிட்டு இறங்கினேன். கீழே கம்பளத்தில் படுத்திருந்த சின்னக்கிளியும் எழும்பிவிட்டாள். அவளுடைய முகத்திலே ஒரு ஆச்சரியம் படர்ந்தது. தொடர்ந்து சீன வெடிச்சத்தம் பட!பட! வென்று கேட்டது. சின்னக்கிளி ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். நான் அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டேன். அவளுடைய உடல் பதறிக்கொண்டிருந்தது. இப்படித்தான் ஒருநாள்....

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. மத்தியானநேரம். அம்மாவும் நானும் சாப்பிட்டுவிட்ட T.V பார்த்துக்கொண்டிருந்தோம். ஏதோ படம் ஓடிக்கொண்டிருந்தது. அம்மா எதையோ கொறித்துக்கொண்டு படத்தை ரசித்துக்கொண்டிருந்தாள். என்ரை அம்மா... அவள் ஒரு வித்தியாசமான பிறவி. அப்பா வெளிநாட்டில் வேலை செய்கிறார். இப்ப பத்து வருஷம். நான் பிறந்த மூன்றாம் மாதம் போனவராம். இன்னும் வரவில்லை. எனக்கு அவரைப் படத்திலை பார்த்துத்தான் தெரியும். பெரிய மீசை! பார்க்கப் பயமா இருக்கு. என்ரை அப்பாவைப்போல வேறை ஒருவரும் மீசை வைக்கவில்லை. நல்ல வெள்ளை! என்னைப் போல. அம்மா பொதுநிறம். கொஞ்சம் குண்டு தான். பெரிய வடிவெண்டு நான் சொல்ல மாட்டன். ஆனால், அவள் சீலை கட்டினால் அழகாயிருக்கும். ஆனால், அம்மாவுக்குச் சீலைகட்ட அவ்வளது விரும்பமில்லை. எங்கடை அப்பம்மாவுக்கும் அம்மாவுக்கும் நெடுக சீலை கட்டுறது பற்றித் தர்க்கம்வரும். அப்பம்மா அப்பாவோடை போனிலை கதைக்கும்போது சீலைச் சண்டை பற்றிச் சொல்லுவார். 'உன்ரை மனிசி ஆட்டக்காரிபோல அரைப்பாவாடையிலை சைக்கிளிலை திரிறாளடா' அப்பா என்ன சொல்லுவாரோ தெரியாது. அப்பம்மா போனைப் பட்டென்று வைப்பார். அம்மாவை எரிப்பதுபோல ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சாமியறைக்கைபோய் கதவைச் சாத்திவிடுவாள். எனக்கு வேடிக்கையாக இருக்கும். அம்மா சீலை கட்டுறதுதான் எனக்கு விருப்பம். சரி இப்ப அதை விடுவம்....

அம்மா படம் பார்த்துக்கொண்டிருக்க நான் மெல்ல நழுவி வீட்டை விட்டு வெளியே வந்தேன். எங்கடை வீட்டை வெளியிலை நிண்டு பார்த்தன் - மாடி வீடு! பெரிய வீடு போனவருஷந்தான் கட்டிமுடித்து குடிவந்தோம. அப்பாவின்ரை வெளிநாட்டு உழைப்பை எல்லாம் விழுங்கிவிட்டு வீடு எழும்பி நிக்குது. கேற்வரை குரோட்டன் நட்டிருக்கு. அதுதான் வடிவெண்டு அம்மா சொன்னாள். எனக்கு மல்லிகைப் பந்தல்போட விருப்பம். அது வீட்டின்ரை வடிவைக் கெடுக்கும் எண்டு அம்மா சொல்லிப்போட்டாள். எல்லாம் அவள், தான் நினைச்சபடிதான் செய்தாள் . அவளை மாத்த ஏலாது. கேற்றடியிலை யாரோ வந்து நிக்கினம். நான் கிட்டப்போய்ப் பார்த்தன். ஒரு சின்னப்பிள்ளை... சோர்ந்து போய்... கண்கள் மூடியபடி வெளியாலை விழுந்து கிடக்குது. ஐயோ! பாவம்! நான் கேற்றைத் திறந்து வெளியே போய்ப் பார்க்க எண்டு கேற்றைத் தள்ளினன். அது உள்ளாலை பூட்டிக்கிடக்கு... ஓ! அம்மா தொலைக் காட்சியில் படம் போனால் கேற்றைப் பூட்டி விடுவது நினைவுக்கு வந்தது. நான் திரும்பி வீட்டுக்கை போனன். கேற்திறப்பு கலண்டருக்கு மேலை கொழுவிக்கிடந்தது. அம்மா தொலைக்காட்சியில் படத்தில் ஒன்றிப் போயிருந்தாள். அவளைக் குழப்பமுடியாது, பேச்சுத்தான் கிடைக்கும். நான் தும்புத்தடியாலை தட்டித் திறப்பை விழுத்தினன். அது தடக் எண்டு விழுந்தது. அம்மா திரும்பிப் பார்க்கவில்லை.



நல்லகாலம் நான் கையிலை எடுத்துக்கொண்டு திரும்ப, தும்புத்தடி தடுக்கிவிட நான் விழுந்து விட்டேன். கீழே அப்பா அனுப்பிய கம்பளம் விரிச்சுக் கிடந்தபடியால் சத்தம் கேட்கவில்லை, எனக்கும் நோகவில்லை. பூனைபோலை வெளியே வந்து ஓடிப்போய் பூட்டைத் திறந்தேன். அந்தச் சின்னப்பிள்ளை கண்ணைத் திறந்து என்னைப் பார்த்து. எனக்கு விளங்கிவிட்டது. அந்தப் பிள்ளைக்கு நல்ல பசி. எனக்கு அந்தப் பிள்ளைக்குச் சாப்பாடு



குடுக்கவேணும் எண்டு விருப்பமாயிருந்தது. அம்மாவுக்குத் தெரியாமல் பிள்ளையை எங்கடை கிச்சினுக்கை கூட்டிக்கொண்டு போகலாம். எங்களுக்குச் சமைக்கவாற அம்மா வந்து போகவெண்டு ஒரு கதவு வெளியாலை இருக்கு. அதாலை போகலாம். ஆனா, அது இப்ப உள்ளாலை பூட்டிக்கிடக்கு. அம்மாவைக் கடந்து போய்த்தான் அதைத் திறக்க வேணும். பிள்ளையின்ரை கையைப் பிடிச்சு எழுப்பினன். கையெல்லாம் குளிருது. மெல்ல நடத்தி பின் கதவடியிலை இருத்திவிட்டன். ஓடி வந்து மறக்காமல் கேற்றைப் பூட்டி விட்டன். திறப்பை சட்டைப் பொக்கற்றுக்குள் போட்டிட்டு, மெல்ல நடந்து வீட்டுக்கை வந்தன். கலண்டருக்குக்கீழை கேற்றுத் திறப்பை நிலத்திலை வைச்சான். T.V யிலை மன்மராசா ... பாட்டுப்போய்க் கொண்டிருந்தது. அந்தப்பாட்டு அம்மாவுக்கு நல்ல விருப்பம். நல்ல காலம்... இப்ப நான் வெளிக்கதவைத் திறக்கலாம்! நான் போய்க் கதவைத் திறந்தன். பிள்ளையைப் பார்த்தேன். கண்மூடிக் கிடந்தது. ஓடிப்போய் தண்ணி கொண்டு வந்து முகத்தில் தெளிக்க, அவள் கண்ணைத் திறந்தாள். தண்ணியைக் குடிக்கக் கொடுத்தன்.

மடமடவெண்டு குடிச்சாள்... குடிச்சுப் போட்டு நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை... இன்னும் என்ர கண்ணுக்கை நிக்குது. மேசையிலை சாப்பாடெல்லாம் கிடக்குது. சோறு கறியெல்லாம் ஒரு தட்டில் எடுத்துப்போட்டு அந்தப் பிள்ளையின்ர கையில குடுத்தன். அவள் அதைவாங்கி மளமளவென்று சாப்பிட்டாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் ஒன்றையும் மிச்சம்விடவில்லை. எனக்குப் பிடிக்காத கறியெல்லாம் போட்டுக் கொடுத்தன். அது சாப்பிட்டு முடிச்சிட்டுது. பாவம் நலல பசி....! இன்னும் வேணுமோ என்று நான கேட்க அது தலையை மட்டும் ஆட்டிச்சு. என்ன பிள்ளையிது. எனக்கு வாயைத்திறந்து நன்றி என்று சொல்லமாட்டுதோ! குடிக்கத் தண்ணீர் கொடுத்தன். இப்ப அந்தப்பிள்ளையின்ர முகத்தில செந்தளிப்பு வந்துவிட்டது. நான் ஏதோ அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்! அப்பம்மா நிக்கிறா! இப்ப என்ன செய்யிறது... எதுக்கும் அப்பம்மாட்டை எல்லாத்தையும் சொல்லிறது நல்லது. நான் நடந்ததைச் சொன்னன். அப்பம்மா ஒன்றும் பேசல்லை. பிள்ளைக்குக் கிட்ட வந்தா மோனை உன்ர பேரென்ன? எங்கயிருக்கிறனி? அவ கேட்க, அந்தப்பிள்ளை கதைக்கவில்லை. கையால தான் சைகை காட்டி மறுமொழி சொல்ல, எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்பம்மாவைப் பார்த்தன். அவவுடைய கண்ணில கண்ணீர்.... பிள்ளையை ஆதரவுடன் அணைத்துக்கொண்டு அவள் சொன்னாள் - பிள்ளை நீ இங்கை என்னோட இருக்கலாம். நான் உன்னை அப்பா, அம்மா இல்லாத குறை



தீர வளர்க்கிறன். எனக்கு ஒரு கேள்வி மனத்தில எழுந்தது. அப்பம்மா! அம்மாட்டைக் கேட்க வேண்டாமே? நான் கேட்டு விட்டேன். அவள் என்னத்தைச் சொல்லுறது. இது என்ர காணியும் வீடும். நான் என்ர விருப்பப்படி உன்னையும் இவளையும் நல்லபடி வளக்கப் போறனடி. 'அப்பம்மா நீங்கள் நல்லவர்' எனக்கு இப்ப சுத்தமான தமிழ்தான் வந்தது. அப்பம்மா இந்தப் பிள்ளைக்கு என்ன பெயரெண்டு கேளுங்கோவென்!... அவளுக்கு சின்னக்கிளி என்று நான் பேர் வைச்சிட்டன். எனக்கு அந்தப் பெயர் பிடிச்சிட்டுது. நல்ல பெயர்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# ஆயுளை அதிகரிக்கும் சிரிப்பு



வாய்விட்டு சிரிக்க நோயவிட்டு போகும்! என்பதுபோல நாம் எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷமாக இருக்கிறோமோ அந்தளவுக்கு எமது உடல் நலனும் நன்றாக இருக்கும்.

நாள் தோறும் சிரிப்பவர்களின் ஆயுள் அதிகரிக்கின்றது. நாம் குழந்தையாக இருக்கும்போது சில நாட்களிலேயே புன்னகை செய்யத் தொடங்கிவிடுகின்றோம். கிட்டத்தட்ட 20 ஆவது வாரத்திலேயே நாம் சிரிக்க தொடங்கிவிடுகிறோம்.

சத்தம் போட்டுச் சிரிப்பது 6 ஆவது மாதத்தில். கண் பார்வையில்லாமல் பிறந்த குழநதைகூடப் புன்னகைக்கின்றது. எனவே, இந்த உணர்ச்சி தாயைப் பார்த்து கற்றுக் கொண்டதல்ல.

மனிதனுக்கு உள்ளுக்குள்ளாகவே ஏற்பட்ட இந்த சிரிப்பு, அவன் வளர வளர அவனுடைய சமூகத்தேவைகளுக்கு ஏற்ப, கட்டுப்படுத்தப்பட்ட உணர்ச்சியாகிறது.

அழுத்தக்காரர்கள் விரைவில் சிரிக்க மாட்டார்கள் என்பார்கள். நகைச்சுவை உணர்வு எல் லோருக்குமே இருக்கிறது. சமூகத் தேவைகளுக்கு ஏற்ப இந்த உணர்ச்சியை நாம் உன்னதப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

நகைசசுவை உணர்வு இல்லாதவர்களின் வாழ்வில் எப்போதுமே நிம்மதி இருக்காது. ஆகவே, பெண்களே சின்ன சின்ன பிரச்சினைகளுக்கும் மனம் கலங்காமல் சிரிக்க பழகிக்கொள்ளுங்கள்.

துன்பம் வரும்போது சிரியுங்கள் என்று நம்முன்னோர்கள் சும்மாவா சொன்னார்கள்.

அதற்காக எதற்கெடுத்தாலும் சிரிக்காதீர்கள். இடமறித்து சிரிப்பதுதான் நல்லது. அதுவும் இளைஞர்கள் மத்தியில் இளம் பெண்கள் காரணம் இல்லாமல் சிரிக்கக்கூடாது.

அப்படி சிரித்தால் சிரிக்க சிரிக்க என்னை சிறையிலிட்டாள் என்று புலம்பிவிடுவார்கள்-கவனம்.

# வாகனங்கள் ஓரும் பெண்களுக்கு




**(சென்றவாரத் தொடர்ச்சி...)**

கோடை காலத்தில் அதிகம் வெளியில் செல்ல நேரும்போது சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால் சருமத்தில் ஏற்படும் பாதிப்புக்களான நிறம் குறைதல் போன்றவைகளை எளிதாகத் தவிர்க்கமுடியும். அதிலும் குறிப்பாக வாகனங்களை ஓடும் பெண்கள் கூடுமானவரை கைகளுக்குத் துணிகளினாலான கையுறைகளை அணிந்துசெல்வதால் நிறம் குறைந்துபோதல், சருமத்தில் வரட்சி, சருமம் பொலிவிழப்பது போன்றவைகளைத் தவிர்க்கமுடியும்.

முகம், கழுத்துப் பகுதிகளிலும் மற்றும் சூரிய ஒளி நேரடியாகப்படும் இடங்களிலும் சண்கிறீம் தடவிக்கொண்டு செல்லுதல் நலம். தற்போது பவுடர் வகைகளிலும்கூட சண்கிறீம் கலந்தவைகள் அறிமுகமாகியுள்ளன.

இப்படி எதுவும் எடுத்துக்கொள்ளாத நிலையில், வெளியில் சென்று நிறம்குறைந்து, சருமம் பொலிவிழந்துபோனால், அவைகளை எளிதில் பழைய பொலிவுக்கு கொண்டுவரும் வழிகள்பற்றிப்பார்ப்போம்.

பப்பாளிச்சாறு, தோடம்பழச்சாறு இரண்டும் ஒவ்வொரு தேக்கரண்டி, தேன் இரண்டுசொட்டு இவைகளை நன்கு கலந்து முகத்தில் மென்மையாகத் தடவி மசாஜ் செய்யவேண்டும். மசாஜ் செய்வது எப்போதும் மேல்நோக்கியே செய்யவேண்டும். பின்னர் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவவேண்டும்.

எண்ணெய்தன்மையை அகற்ற பயிற்றம்மா, கடலைமாவைத் தேய்த்து கழுவலாம் கூடுமானவரை சவர்க்காரங்களை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். இதைவிட முட்டையின்வெண்கருவை முகத்தில் தடவி அது நன்கு உலர்ந்தபின்பு வெதுவெதுப்பான சுடுநீரில் முகங்கழுவ மங்கலான நிலைமாறி, முகம் பளபளப்புப் பெறும்.

தேனுடன் பாலாடையை சம அளவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம்வரை அப்படியே ஊறவிட்டு, குளிர்ந்த நீரில் முகத்தைக்கழுவவேண்டும். இப்படிச் செய்வதால் முகம் வரட்சி நீங்கி, பளபளப்புப் பெறும். குளிர்நீரில் முகம் கழுவியபின்பு, பாலாடை மற்றும் தேன் இவைகளின் பிசுபிசுப்பு நீங்க கடலைமா அல்லது பயிற்றம்மாவைத் தேய்த்துக் கழுவலாம்.

# இந்த வார பலன்கள்

## 16.04.2004- 22.04.2004 (திருக்கணிதம்)

<table>
<tr><td></td><td>சூ.புத. ராகு</td><td>செவ் சுக்</td><td>சனி</td></tr>
<tr><td>சந் யுரே</td><td rowspan="2" colspan="2">16 இ. 11.43 மீன - சந்<br>19 கா. 7.54 மே - சந்<br>21 மா. 6.59 இட-சந்<br>22 கா. 6 - 23 மீன-புத</td><td></td></tr>
<tr><td>நெப்</td><td>குரு</td></tr>
<tr><td></td><td></td><td>கேது</td><td></td></tr>
</table>

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் ஜனனமானவர்களுக்கு பல நற்பலன்களுண்டு. குடும்பஸ்தவர்களுக்கு குடும்பத்தில் புரிந்துணர்வும், ஒற்றுமையும் நிலவும். கணவன், மனைவியிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். புத்திரர்களால் நன்மை உண்டு. தேகசௌக்கியம் பாதிப்படையாது. சுயதேவைகளுக்கேற்ப வருவாய் கிட்டும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். தொழில் ஸ்தாபனத்தில் இருப்பவர்கள் முன்னேற்றத்தையும், கௌரவத்தையும் பெறுவர். தூர தேசப் பிரயாணங்களை மேற்கொள்ள இருப்பவர்கள் நன்மை பெறுவார்கள். வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் கூடிய நன்மை பெறுவர். புதிய முதலீடுகளுக்கு நன்று. மாணவர் கல்வியில் கூடிய கவனம் செலுத்துவர். நேர்முகப்பரீட்சை நன்மை தரும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழில் அலைச்சலையும், பிரயாசையையும் கொடுக்கும். குடும்பத்தில் மனநிம்மதிக்குறைவு காணும். பண வருவாய் வீட்டுத் தேவையைப் பூர்த்திசெய்யாது. குடும்பப் பெண்கள் மனச் சஞ்சலத்துடன் காணப்படுவர். உறவினர்களிடையே மனக் கசப்புக்களும், பகைமையுணர்வும் தோன்றும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையும். செய்யுங்கருமங்களில் சிலர் குற்றம் காண்பார்கள். வீண் பழிகளும் ஏற்படாலம். திருமணப் பேச்சுக்கள் காலவரையின்றித் தள்ளிப் போகும். தொழில் பார்ப்பவர்களுக்கு உயரதிகாரிகளின் அனுசரணை கிடைக்காது. வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே இருக்கும். வாடிக்கையாளர்கள் கைவிடுவார்கள். மாணவர்களுக்கு கூடிய ஊக்கம் தேவை.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு செய்தொழிலில் பிரயாசை அதிகமாயினும் போதிய வாருவாய் கிடையாது. குடும்பஸ்தர்களுக்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனைச் சமாளித்துக் கொள்வர். நிதிநிலை சற்றுக் கஷ்டமாயினும் சமாளிக்கலாம். தேக சுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவு கூடும். பிள்ளைகளால் நன்மையான பலன்கள் கிடைக்கும். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் சாத்தியமாகும். தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு வேலைப் பளு அதிகமாகும். சிலருக்கு கஷ்டமான இடமாற்றம் கிடைக்கலாம். வியாபாரம் பொதுவாக மந்தமாகவே நடைபெறும். கடன் வியாபாரங்களில் அவதானம் தேவை. மாணவர்களுக்கு உயர் கல்வி அனுகூலமுண்டு. ஊக்கம் தேவை.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழில் விருத்தி உண்டு. தொழிலுக்கேற்ப வருமானம் கிடைக்கும். குடும்பஸ்தர்களுக்கு இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். தொடங்குங் கருமங்கள் இலகுவில் தாமதமின்றி நிறைவுபெறும். தேக சுகம் நன்றாகவே இருக்கும். பொருளாதார நிலை திருப்தியாக அமையும். பெரியோர்களின் உதவிகள் கிட்டும். திருமணம் கை கூடிவர வாய்ப்புகள் உண்டு. தொழில் துறையினர் திருப்தியாகப் பணியாற்றுவர். சகதொழிலாளரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தனித்தொழில் புரிவோர் குறிப்பிடக் கூடிய லாபம் பெறுவர். வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். வங்கி உதவிகளும் கைகொடுக்கும் மாணவர்கள் கல்வி முன்னேற்றமடைவர் உயர்கல்வி வாய்ப்புக்கள் உண்டு.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு சிறப்பான பலன்களுண்டு. குடும்பஸ்தர்களுக்கு மன நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டு. குடும்பத்தில் புரிந்துணர்வு ஏற்படும். இனபந்துக்களுடன் நல்லுறவு பேணப்படும். எக்கருமத்தையும் மனத்துணிவுடன் வெற்றிகரமாக நிறைவேற்றுவர். தேகாரோக்கியம் பாதிப்பில்லை. பொருளாதார நிலை பல வகையாலும் தாக்குப் பிடிக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமண நிகழ்வுகள் விரைவில் கைகூடும். தொழில் புரிவோருக்கு பல வகையாலும் இலாபங்கள் கிடைக்கும். உயரதிகாரிகள் பாராட்டுவார்கள். வியாபாரம் முன்னேற்றமடையும். பணவருவாய் நன்று. மாணவர்கள் சித்தியடைவர். நேர்முகப் பரீட்சையும் நன்று.

### கன்னி


*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முயற்சிகளில் பிரயாசை கூடுதலாக இருக்கும். வருமானங்கள் வந்து சேருவதில் தாமதம் ஏற்படலாகும். தேகசுகம் சிறிது பாதிக்கப்படலாம். பிள்ளைகளால் நன்மையான பலன்கள் உண்டு. வெளிநாட்டிலிருந்து பணம் தாமதமாகவே கிடைக்கும். இனஜன பந்துக்களின் வருகையால் வீட்டில் குதூலகம் காணும். திருமணப் பேச்சுக்கள் தாமத பலனையே காட்டும். உத்தியோகத்துறையினருக்கு வேலை மாற்றங்கள் கிடைக்கக் கூடும். எப்படியாயினும் நன்மதிப்பைப் பெறுவார்கள். வியாபார நிலை சிறப்பாக இராது. புதிய முதலீடுகளைச் செய்வதற்கு பொருள் கஷ்டம் ஏற்படும். மாணவர்கள் உற்சாகத்துடன் செயற்பட வேண்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு தொழில் சிறப்பாக நடக்கும். குடும்பஸ்தர்கள் மனநிம்மதியுடன் தொழில் புரிவார்கள். குடும்ப சுகம், புத்திர சுகம் நன்று. தொழில் மூலம் வருவாய் ஓரளவு, அன்றாட செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் செலவு ஓங்கி நிற்கும். தேகநலன் பேணப்படும். இனத்தவர்கள், அயலவர்கள் ஆதரவு உண்டு. பிள்ளைகளால் நன்மை ஏற்படும். குடும்பப் பெண்கள் ஓரளவு திருப்தியாகக் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் நற்பலனைத் தரும். தொழில் புரிவோருக்கு வேலைப்பளு அதிகமாயினும் நற்பலன் காண்பர். வியாபாரம் சிறப்புற நடக்கும். பணம் சேரும் மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி உண்டு. நேர்முகப் பரீட்சை நன்மை தரும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு செய்தொழிலில் பிரயாசை அதிகம். வாருவாய் குறைவாகவே இருக்கும். குடும்பஸ்தர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். கணவன் மனைவி உறவுகளில் விரிசல் தென்படும். பணநிலை செலவுக்குப் போதாமலிருக்கும். எனவே குடும்பப் பெண்கள் மன விரக்தியடைந்தவர்களாகக் காணப்படுவர். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. தேவையற்ற பிரச்சினைகள் தலைதூக்கும். திருமணம் இழுபறி நிலையைக் காட்டும். தொழிலாளர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். தொழிலில் திருப்தி குறைவாகவே இருக்கும். வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். பழைய கடன்களை வசூலிப்பது கடினம். மாணவர்கள் விளையாட்டில் கவனம் செலுத்துவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் விருத்தி நன்று. குடும்ப சுகம் திருப்தியளிக்கும். இனசனக் கொண்டாட்டங்கள் கூடுதலாக இருக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் ஏற்படலாகும். வெளியூரிலிருந்து பண வருவாய் கிடைக்கும். தேக சுகம் நன்றாக அமையும். பொருளாதார நிலை திருப்தியளிக்கும். நண்பர்களாலும், இனபந்துக்களாலும் நன்மை உண்டு. திருமணங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தவர்கள் சிறப்பாகப் பணியாற்றி அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளுக்கும் நற்பலனுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கைகள் சிறப்பாக அமையும். புதிய முதலீடுகளை ஏற்படுத்தலாம். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. வெளிநாட்டுக்கல்வி வாய்ப்பு உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசிக்காரர்களுக்கு அட்டமத்து வியாழன் நடந்து கொண்டிருப்பதால் தொழில் முறையில் பல எதிர்ப்புக்கள் தோன்றும். குடும்பத்திலும் கருத்து வேற்றுமைகள், பிணக்குகள் ஏற்படலாகும். பொருளாதார நிலை திருப்திகரமாக அமையாது. கடன் தொல்லைகள் தலைதூக்கும். தேகாரோக்கியமும் இடையிடையே பாதிப்படையும். குடும்பப் பெண்கள் மன விரக்தியுடன் காணப்படுவர். திருமண முயற்சிகள் கைகூடுவதில் தாமதம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளும் தவிர்க்கமுடியாமல் இருக்கும் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டியேற்படும். வியாபாரத்தில் முன்னேற்றம் இராது. வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் வராது. மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் வளம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், செல்வாக்கும் உண்டு. விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும். வீட்டில் குதூகலம் காணும். திடீர் பண வரவு ஏற்படலாம். தொடங்குங் கருமங்கள் எளிதில் கைகூடும். திருமணப் பேச்சுக்கள் கைகூடி நல்லவாழ்க்கை அமையும். புதிதாகத் தொழில் ஆரம்பிக்க இருப்பவர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வசதியான தொழில் மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பதவி உயர்வு கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். பணம்சேரும் மாணவர்களுக்கு கல்வி சிறக்கும். சிலருக்கு கல்வி சம்பந்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டு.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரருக்கு செய்தொழிலில் பிரயாசை அதிகம். குடும்பத்திலும் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். எனினும் உடனுக்குடன் திருந்திவிடும். பொருளாதார நிலை அதிகம் மோசமாகாது. தேவைக்கேற்ப பொருள் வரவு உண்டு. மக்களால் நன்மை கிடையாது. தேகசுக்கம் இடையிடையே சில பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் பின் நிறைவேறும். தொழில்க்ளில் ஈடுபட்டுள்ளோர் மேலதிகாரிகளுடன் சேர்ந்து நடந்துகொள்வது நன்று. எதிர்த்தால் சில கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கு இலாபம் அதிகம் கிடைக்காது. புதிய முதலீடுகளை நன்கு ஆலோசித்துச்செய்ய வேண்டும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் அடைவர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் குறைவாக இருக்கும். நேர்முகப்பரீட்சைகளில் சித்தி கிடையாமற் போகலாம்.

✦

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XLV - சிவா சின்னப்பொடி

# ஒரு எழுபது வயதுப் பாட்டியின் சோகக்கதை

ஒரு ஒருமணி நேரத்தில் மறுபடியும் அவர்கள் பாடசாலைக்கு சென்றுவிடுவார்கள். திரும்பவும் சமையலறையை சுத்தம் செய்து, அதனுடன் சேர்த்து வீட்டையும் சுத்தம் செய்துவிட்டு - மறுபடியும் தொலைக்காட்சி பார்ப்பதற்கு, அல்லது சிறிது நேரம் படுத்து நித்திரை கொள்வார்கள்.

தொலைபேசி அடித்தால் தமிழ் ஆட்கள் என்றால் கதைப்பார்கள், பிரஞ்சு அல்லது டொச், அல்லது பிறமொழிகள் என்றால் 'No' என்று சொல்லி வைத்து விடுவார்கள். நாளாக நாளாக இந்தத் தனிமை அவர்களுக்கு வெறுக்க ஆரம்பிக்கும்.

இங்கே ஊரில் பக்கத்து வீட்டுக்காரருடன் அல்லது உறவினருடன் சேர்ந்து ஊர்க்கதை பேசின நினைவெல்லாம் வரும். கோயில் குளம் - கடை தெரு என்று திரிந்த நினைவுகள் வரும்.

மாலையில் மக்கள், மருமகள் வந்தால், சமையல் வேலை சில வேளைகளில் ஆரம்பிக்கும். அதற்கு வெங்காயம் உரித்துக் கொடுப்பது, மரக்கறி வெட்டிக்கொடுப்பது, பாத்திரம் கழுவிக்கொடுப்பது என்று சின்னச் சின்ன வேலைகள் செய்து கொடுப்பார்கள்.

அந்த நேரத்தில் மட்டும் மகன் மருமகளுடன் பேச சந்தர்ப்பம் கிடைக்கும்.

ஊர்ப் புதினங்களை கேட்பார்கள். அல்லது பேரப்பிள்ளைகள் செய்யும் குழப்படிகளை 'அம்மாவுக்கு' சொல்லுவார்கள்.

குழப்படி பெரிதாக இருந்தால், பேச்சும் சாத்தலும் விழும். இதனால் பேரப்பிள்ளைக்கு தாத்தா பாட்டியை பிடிக்காமல் போய்விடும்.

அவர்கள், எது செய்தாலும் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பது, பொதுவாகத் தாத்தா, பாட்டியின் குணமாக இருக்கும்.

இங்கே ஊரில் என்றால் பாட்டி தாத்தா சொல் தட்டாத பேரப்பிள்ளைகளை பார்க்கலாம். இப்போது என்னவோ தெரியாது? ஆனால் புலம் பெயர்ந்த நாடுகளில் - நீங்க சும்மா உங்கடை வேலையைப்பாத்துக் கொண்டு இருங்கோ என்று, அதட்டிவிட்டுச் சென்றுவிடுவார்கள். பெரும்பாலான வீடுகளில் பாட்டிக்கும், தாத்தாவுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் இடையிலான முரண்பாடு பெரிய பிரச்சனையாக இருக்கும். பலர் இந்த விடயத்தில் பிள்ளைகளைக் கண்டிக்காமல், அதுகள் இங்கை வளருற பிள்ளைகள், நீங்கள் வயதுபோன காலத்தில் சும்மா அதுகளோட முண்டாமல் பேசாமல் இருங்கோ என்று, பெற்றோரை அதட்டுவது அவர்களை மனமுடையச் செய்து விடும்.

✦ ✦ ✦

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த சிவபாக்கியம் (பெயர் மாற்றப் பட்டுள்ளது) என்ற 70 வயதான இந்தப் பாட்டியின் கதை சோகமானது.

இந்தப் பாட்டிக்கு மூன்று ஆண் பிள்ளைகள் ஒருவர் பிரான்ஸிலும், இன்னொருவர் சுவிஸிலும், மூன்றாமவர் கனடாவிலும் இருந்தனர். பிரான்சில் இருந்த மூத்த மகனுக்கு அம்மாவைக் கூப்பிடவேண்டும் என்று, 1995 ஆம் ஆண்டு ஆசை வந்தது.

பாரிஸின் புறநகர்ப் பகுதியிலுள்ள தொடர் மாடிக்கட்டடம் ஒன்றில் சொந்தமாக வீடு வாங்கிய அவருக்கு, அம்மாவைக் கூப்பிட்டால், வயோதிபருக்கான உதவிக்காசு கிடைக்கும், வீட்டுக்கும் உதவியாக இருக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அப்பா கனக்க கதைப்பார் - தொணதொணத்துக்கொண்டிருப்பார் என்பதால், அவரை ஊரிலேயே விட்டுவிட்டு, வயதான காலத்தில் அம்மாவை மட்டும் தனியாகப் பிரித்து, பிரான்ஸுக்கு அழைத்துவிட்டார்.

அம்மாவின் பாரிஸ் விஜயத்திற்கு கனடாவிலும், சுவிஸிலும் இருந்த இரண்டு தம்பிமாரும் பண உதவி செய்திருந்தனர்.

பாரிஸுக்குச் சென்ற சிவபாக்கியப் பாட்டிக்கு, எல்லாமே புதிதாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது.

ஊரில் மாடிக்கட்டிடத்திலேயே ஏறாத அவர் - பாரிஸில் 12 ஆவது மாடியில் குடியிருந்ததை நினைத்துப் பெருமைப்பட்டார்.

தனது மூத்த மகனின் 12 வயதும், 10 வயதும், 8 வயதும் நிரம்பிய பேரப்பிள்ளைகளுடன் பேசுவதிலும், அவர்களது குறும்புகளைப் பார்ப்பதிலும், முதல் ஓரிருமாதங்கள் பாட்டிக்குப் பிரச்சனையில்லாமற் கழிந்தது.


பாரிஸில் தங்கியிருப்பதற்கான அகதி அந்தஸ்துக்கும், ஒரு கேஸ்காரன் மூலமாக கேஸ் எழுதி விண்ணப்பிக்கப்பட்டது.

6 மாதம் கழித்து - அகதிகள் திணைக்களம் - பாட்டியை விசாரணைக்குக் கூப்பிட்ட போது, பெரிதாக படிக்காத பாட்டியால் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில்கள் கூறமுடியவில்லை.

அதனால், அவரது அரசியல் தஞ்ச மனுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

பிரஞ்சு அரசாங்கம் அந்தப் பாட்டியின் அகதி அந்தஸ்தை நிராகரித்த அதே நேரம், அவரது மருமகளும் - வீட்டில் அவருக்கு இருந்த சலுகைகளை வெட்டிவிட்டார்.

கிழவி ஒழுங்காகப் பதில் சொல்லாததால், மாதாமாதம் வரவேண்டிய 3 ஆயிரம் பிராங்



பணம் பறிபோய்விட்டதே என்ற கவலை அந்த மருமகளுக்கு.

குளிர் காலம் தொடங்கியபோது, பாட்டிக்கு சளிபிடித்தது, முட்டு வந்துவிட்டது. அதற்கு மருத்துவரிடம் காண்பிப்பதற்கு தண்டச் செலவு. அது இது என்று சுடு சொற்கள் கூறி அவரது மனதைப் புண்படுத்திய பின்புதான் மருத்துவரிடம் அழைத்துச்செல்லப்பட்டார்.

மருத்துவர் எழுதிக்கொடுத்த மருந்துகளை வாங்குவதற்கு, அதிக பணம் செலவாகிவிட்டதாக மகனும், மருமகளும் சொல்லிக்குத்திக் காட்டினர். பாட்டி இப்போது அந்த வீட்டில் வேண்டாத விருந்தாளியாகிவிட்டார். கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம் என்று அவரைப் படாத பாடுபடுத்திவிட்டனர். கனடாவில் இருந்த பாட்டியின் கடைசி மகன் அவர் மீது நல்ல பாசம் வைத்திருந்தான். அவனது மனைவியும் அனுசரித்துப் போகக்கூடியவளாக இருந்தாள்.

பாட்டி ஒருநாள் தனது கஷ்டத்தைச் சொல்லி அழுதபோது, அவன் அவரை கனடாவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

*(தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு*
*அச்சாணி அன்னார் உடைத்து.*

திருக்குறள்

## நமது நோக்கு

### தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்திற்கு உறுதியுடன் உணர்த்தியுள்ள செய்தி

கிட்டத்தட்ட கடந்த ஒன்றரை மாதகாலமாக வடக்கிலும், கிழக்கிலும் கருணாவின் தொலைநோக்குச் சிந்தனையற்ற சுயநல நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலைமைகள் - புத்தாண்டு தினத்திற்கு முதல் நாளன்று ஓரளவு பூரணமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டது முதல் இந்தப் பகுதிகளில் அமைதி நிலையும் மக்களின் இயல்பு வாழ்க்கையும் மீண்டும் மெல்ல மெல்ல ஸ்திரமாகி வரத்தொடங்கியுள்ளதாகக் கிழக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் உறுதி செய்கின்றன.

கருணாவின் பிரதேசவாதத்தை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தவும், தமிழ்த் தேசியத்தின் ஒருமைப்பாட்டுணர்வை கூறுபோடவும் முனைந்த சக்திகள் விக்கித்துப்போய் விடக்கூடிய வகையில், கருணா மீதான விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு கிழக்கு மாகாண மக்கள் அளித்த அமைதியான ஆதரவும், கருணாவின் வெளியேற்றத்திற்கு அவர்கள் அளித்த வரவேற்பும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அரசியல் பரிமாணம் கொண்டதாக அமைந்துள்ளதுடன், அது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் கிழக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் காட்டிய அபரிமிதமான ஆதரவும் அதன் பின்னர் கருணா மீதான நடவடிக்கைக்கு ஆதரவளித்து பிரதேசவாதத்தை நிராகரித்தவிதமும், பேரினவாதிகளும் சமாதான எதிர்ப்பு சக்திகளும் கடைசிவரையும் எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

கிழக்கிலிருந்து தேர்வான ஐந்து தமிழரசுக்கட்சி உறுப்பினர்களையும் கருணாவின் அச்சுறுத்தல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி தனியாக இயங்க வைக்கவும், அவர்களை அரசுக்கு ஆதரவளிக்கவைக்கவும் புதிய அரசாங்கம் திரைமறைவில் மேற்கொண்ட முயற்சிகளும் பிசுபிசுத்துப்போன நிலையில், தமிழர் தரப்பின் ஒருமைப்பாட்டின் பலம் மீண்டும் ஒரு தடவை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மட்டு - அம்பாறை மக்கள் தங்கள் பகுதியில் ஏற்பட்ட நெருக்கடிநிலை இவ்வளவு விரைவாகவும், மிகக்குறுகிய காலத்திலும் - எதிர்பார்த்து அச்சப்பட்டுக்கொண்டிருந்த பேரழிவுநிலை ஏதும் ஏற்படாதவகையில் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தால் தீர்த்து வைக்கப்படும் எனக் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள்.

இதன்மூலம் விடுதலைப் புலிகள் தமது மக்கள் மீதும், மண்ணின்மீதும் எவ்வளவு பொறுப்புணர்வுடன், கூடிய அக்கறையுடன் தமது நகர்வுகளை மேற்கொள்கின்றனர் என்பதும் மீண்டும் ஒருதடவை உலகிற்கு வலுவாக உணர்த்தப்பட்டுள்ளது.

இதனால்தான் தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்தியதன்மூலம், தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நிரூபித்துள்ளார் என இந்திய ஊடகமொன்று தெரிவிக்கும்நிலை ஏற்பட்டுள்ளது.

இதே இந்தியாவின் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பலவும் கருணாவின் கோளாறுகள் ஆரம்பமானது முதல் அவரை ஒரு மகா வீரனாகவும், கிழக்கு மக்களின் ரட்சகனாகவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் காட்ட முனைப்புடன் செயற்பட்டதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.


இதேவேளை, இந்த நெருக்கடி ஆரம்மானது முதல் அதன் கனத்தை மிக உன்னிப்பாகக் கவனித்து மதிப்பீடுகளை செய்துவந்த சர்வதேச - குறிப்பாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ராஜதந்திர வட்டாரங்கள் - இந்தப் பிரச்சினையில் இப்படியொரு திருப்பம் இவ்வளவு விரைவில், அதுவும் இழப்புக்கள் அதிகமற்ற இராணுவ நடவடிக்கை ஒன்றின்மூலம் விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டு வியந்துபோயுள்ளனர்.

இது விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கையையும், மதிப்பையும் மட்டுமல்ல, அவர்கள் தமிழ் மக்களின் ஏக தலைமைத்துவத்துக்குரிய வலுவான சக்தி என்ற எண்ணத்தையும் அவர்களுக்கு அதிகரிக்க வைத்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகால சமாதான நிலைமையானது விடுதலைப் புலிகளின் கொள்கை உறுதீப்பாட்டையும், படையணி வலுவையும், போரிடும் திறனையும் எந்தவகையிலும் பாதிக்கவில்லை என்ற செய்தியையும், அவர்களுக்கான மக்கள் ஆதரவு தங்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மட்டுமல்லாது, இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும்கூட உச்சநிலையில் உள்ளதென்பதையும் - கருணா் கும்பல் மீதான படை நடவடிக்கையும், நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளன என்றால் அது மிகையில்லை.

இதன்மூலம் தங்கள் சார்பில், தங்கள் மண்ணின் சார்பில் தங்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமை தொடர்பான பிரச்சினைகள் குறித்து பேசவல்ல ஒரேயொரு தலைமைத்துவ சக்தி விடுதலைப் புலிகள்தான் என்பதைத் தமிழ் மக்கள் தெட்டத்தெளிவாக உணர்த்தியுள்ளனர்.

## நாடும் நடப்பும்




## குருநாகல் துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாயமடைந்தனர்

(கொழும்பு)

குருநாகல் தம்பதெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், காயமடைந்தவர்கள் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான பிரதேசம் ஒன்றினுள் இனந்தெரியாத குழுவினர் நுழையமுற்பட்டவேளை, அந்த இடத்திற்குக் காவலாக நின்ற காவலாளி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இருவரும் காயமடைந்தனர்.

குறித்த குழுவினர் அந்தப் பிரதேசத்துக்குள் நுழைந்தமைக்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

தேர்தல் காலங்களில் குருநாகல் பகுதிகளில் வன்முறைகள் அதிகரித்து வந்தமையின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவமும் அரசியல் சார்ந்ததாக அமைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும், விசாரணைகள் நடைபெற்று வருவதால் இது குறித்துத் திடமாக எதனையும் குறிப்பிடமுடியவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (01)

## நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கை

கடந்த சில நாட்களாக நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளனர்.

குறிகாட்டுவானிலிருந்து வரும் பயணிகளின் உடமைகளே சோதனையிடப்பட்டு வருகின்றன. சட்டவிரோதமானமுறையில் மதுபானம் கொண்டுவரப்படலாம் என்பதற்காகவும், சட்டவிரோத மதுபான விற்பனையை தடைசெய்யும் நோக்குடனேயே இந்தச் சோதனை இடம்பெறுவதாகத் தெரியவருகிறது.

கடந்த சில நாட்களாக இவ்வாறு கொண்டுவரப்பட்ட மதுபானப் போத்தல்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது, (113)

### ஒதுக்கப்பட்ட அமைச்சரவையை

## ஜே.வி.பியினர் பதவியேற்றால் விரைவில் அமைச்சரவை கூடும்

ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களையும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றால், புதிய அரசாங்கம் தனது அமைச்சரவைக் கூட்டத்தை வெகுவிரைவில் நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ள போதிலும், அதற்கு முன்னரே இந்த அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறலாம் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, நாளை அல்லது நாளை மறுதினம் ஜே.வி.பியினர் தமது அமைச்சுப்பதவிகளை ஏற்றுக்கொள்வார்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

## யாழ். பொது நூலகத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

கொழும்பு லயன்ஸ்கழகத்தினரால் யாழ்.பொது நூலகத்திற்குப் பொறியியல் கற்கைகள் தொடர்பான பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ்.நூலகத்தில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.இராமலிங்கம், யாழ்.பொதுநூலக நூலகர் எஸ்.தனபாலசிங்கம், யாழ்.மத்தியகல்லூரி அதிபர் எஸ்.இராஜதுரை மற்றும் கொழும்பு - யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

இந்தப் புத்தகங்கள் முன்னாள் கொழும்பு அரிமாக்கழக ஆளுனர் டன்சன்லாலின் முயற்சியால் வெளிநாட்டில் வசிக்கும் மதன் குமாரசாமி என்பவரிடமிருந்து பெறப்பட்டு, ஜே.எவ்.சரத் குணசேகரவால் வழங்கப்பட்டது.

இந்தப் புத்தகங்கள் யாவும் நேற்று யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.இராமலிங்கத்திடம் வழங்கப்பட்டது.

## தம்பலகாமம் மருத்துவமனைக்கு முன் பொதுமக்கள் மறியற்போராட்டம்!

(கொழும்பு)

திருகோணமலை - தம்பலகாமம் மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் பொதுமக்கள் மறியற்போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

நேற்று மதியம் இந்த மறியற்போராட்டம் இடம்பெற்றது.

வைத்தியசேவையில் காணப்படுகின்ற வசதியீனங்களை நீக்கக்கோரியே இந்த மறியற்போராட்டம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் வைத்தியசாலைக்குச் சென்ற பொதுமக்கள் - வைத்தியசாலை ஊழியர்களை வெளிவராது தடுத்து அவர்களை உள்ளே வைத்துப் போராட்டம் நடத்தியதாகத் தெரியவருகின்றது.

குறிப்பிட்ட மருத்துவமனையில் போதியளவு மருத்துவர்கள் இன்மையைக் கண்டித்தும், விடுமுறையில் சென்ற ஊழியர்கள் இன்னமும் கடமைக்குத் திரும்பாமை குறித்தும் அதிருப்தி தெரிவித்தே இந்தப் போராட்டம் மக்களால் நடத்தப்பட்டது.(01)

## வலுவிழந்தோர் மேம்படுத்தல் தொடர்பாக ஆராய செயலகத்தில் இந்த மாத இறுதியில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோரை மேம்பாடடையச் செய்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று சமுதாயமட்ட புனரமைப்பு நிறுவனத்தால் யாழ். செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், சமுதாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சியாளர்கள் முதலியோர் கலந்துகொள்ளவேண்டுமென யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பி.எல்.திலகநாயகம்போல் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வலுவிழந்தோருக்கான தொழிற் பயிற்சிகளை வழங்குதல், அவர்களுக்கான விசேட உதவிகள் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இதில் - யுனிசெப் மற்றும் யு.என்.எச்.சி.ஆர். முதலான நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

வலுவிழந்தோரின் அபிவிருத்திக்காக செலவிடப்படவேண்டிய நிதியின் அளவு குறித்தும்,அடுத்தகட்ட நடவடிக்கைகள் [illegible]த்தும் இதில் கலந்தாலோசிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

அரசியல் நோக்கு

கனக நமநாதன்

# தமிழர்களைக் காலம் காலமாக ஏமாற்றும் தென்பகுதி அரசியல் தலைமைத்துவங்கள்



சுதந்திரம் பெற்ற நாட்களிலிருந்தே தமிழ் மக்கள்மீதும், அவர்களின் உரிமைகள், அபிலாஷைகள் போன்றவற்றிலும் கையை வைத்து, தமது தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வணிகலனாக்கி, மாறிமாறி ஆட்சிப்பீடமேறுவதற்கு தென்னிலங்கை அரசியற் கட்சிகள் செயற்பட்டதை எவரும் மறுக்கமுடியாது.

அவர்கள் தமிழ்மக்களுக்கு எதிராக கொண்டுவந்த சட்டவாக்கங்கள் எல்லாம் அவர்களின் சுயநல அரசியல் தேவைகளுக்கு மாத்திரமே என்பதை தற்போது மீளாய்வு செய்யும்போது வெளிப்படையாகத் தெரியவருகின்றது.

1949 ஆம் ஆண்டில் மலைநாட்டுத் தமிழருக்கு எதிராகக் கொண்டுவந்த பிரஜாவுரிமைச் சட்டம் - இன்று என்ன நிலையில் உள்ளது? மலையக மக்கள் எல்லோருக்குமே பிரஜாவுரிமை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்படியென்றால் அச்சமயத்திலே தீர்க்க தரிசனமாகச் சிந்தித்துச் செயற்படத் தெரியாது போனதா?

1956 ஆம் ஆண்டில கொண்டுவரப்பட்ட "சிங்களம் மட்டும்" சட்டத்திற்கு இப்போ என்ன நடந்திருக்கின்றது. தமிழும், சிங்களமும் அரச மொழிகளாகவும், ஆங்கிலம் தொடர்பு மொழியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அன்று "சிங்களம் மட்டும்" சட்டம் கொண்டுவரப்பட்டமை சிங்கள மக்களின் வாக்குகளைக் குறிவைத்தே என்பதை மறுக்கமுடியாது.

1960 களில் சிங்கள 'ஸ்ரீ' வாகன இலக்கங்களுக்கு முன்பாகப் போடக் கொண்டுவரப்பட்டது.

அதன் பலனாக தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகங்கள், போராட்டங்களை நடத்தியது. அதற்கு இப்போ என்ன நடந்தது. வெறும் கீறு (-) ஒன்று மட்டும் 'ஸ்ரீ' யின் இடத்தைப் பிடித்துள்ளது. அப்படியெனில் அன்று சிங்கள 'ஸ்ரீ' ஏன் கொண்டுவரப்பட்டது? இதெல்லாம் சிங்கள மக்களிடம் வாக்குவேட்டைக்குத் தமிழர் விரோதத்தைப் பயன்படுத்திய உத்திகளேயாகும்.

1972 ஆம் ஆண்டு சிறிமா அரசாங்கம் மாணவர்கள்மேல் கையை வைத்து தரப்படுத்தலைக் கொண்டுவந்ததன் காரணமாக சிறந்த சித்தியெய்திய மாணவர்களில் பலர் பல்கலைக்கழகத்திற்குள் புகமுடியாமல் போனது.

யாழ்ப்பாண மாணவர்கள் இயற்கையாகவே படிப்பில் கூடிய சிரத்தை எடுத்து முன்னேறுவார்கள். இந்த மாணவர்களுக்குத் தரப்படுத்தல் ஒரு பலத்த அடியாகவே அமைந்தது. அதன் விளைவு காலப்போக்கில் தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டங்கள் -ஆயுதப் போராட்டமாக மாறவேண்டிய சூழ்நிலையை உருவாக்கியது. இதற்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராட்சி மாநாடும், அல்பிரட் துரையப்பாவின் செயற்பாடுகளும் உரமூட்டின. பொலிஸ் அராஜகங்கள், கெடுபிடிகள் வலுப்பெற்றிருந்த காலம் ஆயுதமேந்த வேண்டிய நிலைக்கு உதவியது.

1946 ஆம் ஆண்டின் சோல்பரி அரசியலமைப்பில் 29 (2) இல் சிறுபான்மையினரின் நலன்களுக்கெதிராகச் சட்டங்கள் இயற்றப்பட முடியாது என்ற உறுப்புரிமையை 1972 ஆம் ஆண்டின் சிறிமாவின் குடியரசு அரசியலமைப்பில் எந்தளவிலும் உள்ளடக்காது சிறுபான்மையினரின் நலனுக்குப் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கியதும், தந்தை செல்வா அவர்களின் தமிழரசுக்கட்சியினர் அரசியலமைப்புச் சபையின் கடைசிக் கூட்டங்களில் பங்குபற்றாதுவிட்டதும் 'இனி தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று கூறியதும் ஆயுதப்போராட்டத்திற்கு வித்திட்ட அடிப்படை காரணமாகலாம்.

ஆகையால் சுதந்திரம் கிடைத்த பின் ஒவ்வொரு கால கட்டத்திலும் சிங்களத்திற்கும், சிங்கள மக்களுக்கும், பௌத்தத்திற்கும் உயர்வான நிலைமையைக் கொண்டு வருவதற்கே மாறிமாறி வந்த இரண்டு அரசுகளும் முன்னெடுப்புக்களைச் செய்து கொண்டிருந்தன. அவர்கள் கொண்டுவந்த தமிழர் விரோத சட்டங்களுக்குத் தமிழ் தரப்பால் தனித்து நின்று வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பும் இருந்து வந்திருக்கின்றன.

திருவாளர்கள் சி.சிற்றம்பலம், சி. சுந்தரலிங்கம், எதிர்மன்னசிங்கம் நல்லையா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோர்களும் பின்னர் அல்பிரட் துரையப்பா, சி. அருளம்பலம், ஏ. தியாகராசா, ராஜன் செல்வநாயகம் ஆகியோரும் அரசாங்கத்திற்கு தமது ஆதரவை அளித்து பதவிகளைப்பெற்று தம் சுய அரசியல் இலாபங்களை அடைந்து வந்துள்ளார்கள்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு விசுவாசமில்லாத சந்தர்ப்பங்களிலெல்லாம் சிங்கள அரசுகள் தாமாகத் தமிழ்த் தலைவர்களை உருவாக்கி அவர்களைத் தமிழர்களின் பிரதிநிதிகளென வெளியுலகிற்கு காட்டிவந்தனர். அந்த வகையில் குமாரசூரியர் பின்னர் தற்போது லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் உருவாக்கப்பட்டவர்கள் ஆவர்.

தமிழ்த் தலைவர்கள் சிலரைத் தங்கள் கைக்குள் முடக்கி வைத்துக் கொண்டே, தமிழர் விரோத சட்டங்களைக் கொண்டு வருவதற்கோ அல்லது தமிழர் பிரச்சினையை இழுத்தடிப்புச்செய்து தீர்வுக்கு வராமல் குழப்புவதற்கோ சிங்கள அரசுகள் முயன்றிருக்கின்றன. தற்போதும் தமிழ் மக்களிடையே புல்லுருவிகளை உருவாக்கப் பேரினவாத சக்திகள் முன்னின்று செயற்பட்டுவருகின்றன.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எம்மோடும் உள்ளனர். அவர்களின் அக்கறைகளைக் கவனிக்க எம்முடன் இணைந்துள்ளனர் எனக் கூறுவதற்கு அரசுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

அந்த வகையில் விலைபோகக் கூடியவர்களை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தேர்தலில் நிறுத்தி வெல்ல வைப்பதற்கு பிரயத்தனம் செய்தனர்.

ஈ.பி.டி.பி.யினர் முன்னர் பிரேமதாச அரசிலும் பங்காற்றினார்கள் பின் சந்திரிகாவின் அரசிற்கு முழுமூச்சாக ஒத்துழைத்தார்கள். இப்போது மீண்டும் அதன் ஒரே உறுப்பினரை சந்திரிகா புதிய அரசில் அமைச்சராக்கியுள்ளார். அவர் அபிவிருத்தியை பற்றி மட்டும் பேசுவார்.


தமிழ் மக்கள் உரிமைகளைத்தான் வேண்டி நிற்கின்றார்கள். சலுகைகளையல்ல என்பதை மேலும் மேலும் நிரூபிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகவுள்ளது. இவ்வளவு உயிரிழப்பு, சொத்தழிப்புகளுக்கு பின் இன்னும் சலுகை பற்றிப் பேசுவதில் எந்தவித அர்த்தமுமில்லை என்பதை மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதையே இத்தேர்தல் முடிவு உணர்த்தி நிற்கிறது.


இடைக்கால நிர்வாகம் கிடைத்த பின்பு அபிவிருத்தி செய்ய எல்லோரும் ஒன்று சேரட்டும். தற்போதைய தேவை உரிமைகளை வென்றெடுப்பதே. சர்வதேச சமூகத்தின் முழு ஆதரவுடன் பாதிதூரம் சென்று விட்டோம் மிகுதி தூரத்தையும் தாண்டக்கூடிய 'தமிழில், தமிழ் இனத்தில், தமிழ் மண்ணில் பற்றுள்ளவர்களைப் பாராளுமன்றம் அனுப்புதல்வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாகவே இருந்திருக்கிறார்கள் இதனை தென்னிலங்கை பேரினவாதிகளும் சர்வதேச சமூகமும் உணரவேண்டிய காலகட்டம் இதுவாகும். ★

தென்னாசிய அரசியல் விளையாட்டு

எஸ்.ஜெயா

# கிரிக்கெற் - அரசியல் இந்தியா எதிர் பாகிஸ்தான் இடையில் காஷ்மீர்







நீண்டகாலமாக இந்தியாவும், பாகிஸ்தானும் எல்லையில் வரிந்துகட்டிக்கொண்டு நிற்பதும், ஒருவரை ஒருவர் வாய்ச்சவாலால் அடித்து வீழ்த்துவதும், பின்னர் சந்திப்பதும் சமாதானம் எனபதும் சிறுகால இடைவெளிக்குப் பின போர் என மீண்டும் முழக்கமிடுவதுமாக தமது அரசியல் நாடகத்தினை நன்றாக அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறே இந்தியப் பிரதமர் 'லாகூர்' சென்றதும், பாகிஸ்தானிய ஜனாதிபதி 'ஆக்ரா' வந்ததும் பின்னர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனதுமாக நிகழ்வுகள் நிகழ்ந்தேறின. இத்தகைய நிகழ்வுகளின் மத்தியில் முக்கிய திருப்பமாக பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையிலான கிரிக்கெட்போட்டி பாகிஸ்தானில் இடம்பெறுவதை சர்வதேசம் நோக்குகிறது.

ஆனால், இன்று இது இந்தியாவைப் பொறுத்தவரையில் அரசியல் சார்ந்ததாகவும், பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் இராஜதந்திரம் சார்ந்ததாகவும் இருநாடுகளாலும் நகர்த்தப்படுகின்றது. இதன் வெளிப்பாடாகவே பிரியங்கா காந்தி இப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டதும், முஷாரப் இப்போட்டியினை கட்டணம் செலுத்திப் பார்வையாளர் இருக்கையில் அமர்ந்து ரசித்துக்கொண்டது மாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை நெருங்கி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பைத் தீர்மானிக்க சிறந்ததொரு கருத்துக்களம தேவை. ஆளுங்கட்சியில் - சோனியா வெளிநாட்டவர் என்ற கருத்து மக்களிடம் பெரிதாக எடுபடாது போகவே, பாகிஸ்தான் பிரச்சினையை கிரிக்கெட் ஊடாக அணுகியதெனலாம். இதனை அவதானித்த எதிர்க்கட்சியான காங்கிரஸ் அந்தப் பந்தியில் தானும் இடம்பிடிக்க முனைந்தது எனலாம்.

இதேபோன்றே பாகிஸ்தானுக்கும் மாறிவரும் சர்வதேச ஒழுங்கில் தன்னைத் தக்கவைத்துக்கொள்ள தற்காலிகமாகவேனும் இந்தியாவின் நட்பு தேவைப்பட்டது. இதனை ஈடுசெய்யும் முகமாகவே இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டியது. இதன்மூலம் பாகிஸ்தான் அமெரிக்காவின் அச்சுறுத்தலைச் சமாளிக்கவும்; தான் இப்பொழுது எதிர்கொள்ளவேண்டியுள்ள அணு ஆயுதச் சிக்கலை மந்தப்படுத்தவும் முடியும் எனக் கருதுகின்றது.

இவ்வாறு இருநாடுகளும் தமது அரசியல் இராணுவ உள்நோக்கிற்காகவே நேசம் கொண்டதால், இவர்களின் உறவு தொடர்ந்து நீடிப்பது என்பது சாத்தியமாகாது. இதுவே இவர்களின் தொடர் வரலாறாகவும் உள்ளது தெரியவரும்.

இவ்வாறு இருநாடுகளும் காலத்துக்குக்காலம் கூடுவதும் பின் வம்புக்குப் போவதுமாக அமைவதற்கு யாது காரணம் என நோக்குகையில் காஷ்மீரே இரு நாடுகளின் மோதல்களுக்குக் காரணமாக உள்ளது புலனாகும்.

இவ்வாறு இருநாடுகளுக்குமிடையில் காஷ்மீர் எவ்வாறு அகப்பட்டுக்கொண்டது என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தபோது அரசர்கள் ஆண்ட சமஸ்தானங்கள் அந்தந்த அரசர்கள் கையெழுத்திட அவை இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைந்தன. ஆனால், காஷ்மீர் கதையோ தனிக்கதை. மகாராஜா ஹரிசிங் எந்தப்பக்கமும் போகாமல் தனி இராஜ்ஜியமாக ஆள்வோம் என்று கனவுகண்டுவந்தார்.

பாகிஸ்தானுடன் சேர்ந்துவிடுவேன் என்று மிரட்டிய ஹைதராபாத் நிஜாமின் கதையை சர்தார் பட்டேல் முடிக்கமுடிந்தது. இராணுவத்தினை இறக்கி ஹைதராபாத் இந்தியாவுக்குள் சிக்கவைத்ததன் காரணமாக அந்த இடத்தில் பாகிஸ்தான் மூக்கை நுளைக்க முடியவில்லை.

மாறாக காஷ்மீரே இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்திருந்தது. காஷ்மீரத்தில் முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். மகாராஜா ஹரிசிங் இரு அரசுகளுக்கும் 'பாவ்லா' காட்டிக் கொண்டிருந்தார். இவ்வாறு 'பாவ்லா' காட்டிக் கொண்டிருந்தாலும், பாகிஸ்தானுடன் இணைந்துகொள்ளத் தயாராக இருப்பது போன்று சமிக்ஞை செய்து தனது படையினரையும் இறக்கி, பாகிஸ்தான் காஷ்மீரைக் கைப்பற்றமுயன்றது.

காஷ்மீரைக் கைப்பற்றுவதற்குப் பதில், கண்ணில் பட்டதையெல்லாம் துவசம் செய்யத் துவங்கினார்கள். பத்தானியர்கள். காஷ்மீர் முஸ்லிம்கள் மிகவும் நாகரிகத்தில் உயர்ந்தவர்கள் இந்து மற்றும் பௌத்த மதங்களின் பல்வேறு கூறுகளால் ஈர்க்கப்பட்டவர்கள்.

சூ.பிக்கள் எனும் துறவிகள் எம்மதமும் சம்மதம் என்று கூறிய அவர்களை பூஜிப்பவர்கள், பாகிஸ்தானுடன் இணைவதில் பெரும்பாலான காஷ்மீர் முஸ்லிம்களுக்கு அந்தக் கட்டத்தில் விருப்பமேயில்லை.

இந்த மக்களைத்தான் பத்தானியப் பழங்குடியினரும், பாகிஸ்தான் இராணுவ வீரர்களும் கொன்று குவித்தனர். பெண்களை பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்கினர். பல்வேறு இன்னல்களுக்குள்ளாக்கினர். இந்தக் கட்டத்திலேயே வேறு வழியில்லாமல் ஹரிசிங் இந்தியாவுடன் இணைந்துகொள்ள முன் வந்தார்

(தொடரும்).

## ஈராக்கில் இஸ்லாமிய அமைப்பினால்
# கடத்தப்பட்ட 4 இத்தாலியர்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்!

ஈராக்கில் இஸ்லாமிய அமைப்பினால் கடத்திச் செல்லப்பட்ட நான்கு இத்தாலிய பணயக் கைதிகளில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக இத்தாலிய வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது. இறந்தவர் 36 வயதுடைய பாப்பிரிசியோ குவாற்றேச்சி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தக் கொலை தொடர்பான வீடியோ பிரதியொன்று அராபிய தொலைக்காட்சி நிறுவனமான அல் ஜெசிராவிடம் இருந்தபோதும் ஒளிபரப்பப்படவில்லை. ஏனெனில், இக் கொலை கொடூரமான முறையில் செய்யப்பட்டிருந்ததென அல்ஜெசீரா தெரிவித்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக கருத்துத் தெரிவித்த இத்தாலிய பிரதமர் சில்வியோ பேர்லுஷ்கோனி தமது நாட்டு பணயக் கைதி கொல்லப்பட்டது இது முதல் தடவையெனவும், ஆனால் ஈராக்கின் மீதான தமது நாட்டின் சமாதானப் பணிகளை இந்தக்கொலைச் சம்பவம் பாதிக்கப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார். அத்துடன் ஒரு மனிதனின் உயிரை ...ழித்துள்ளதன் மூலம் சமாதான முயற்சிகளை அழித்துவிட முடியாதென இத்தாலிய தொலைக்காட்சியொன்றிற்கு பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இத்தாலியின் வெளிநாட்டமைச்சர் பணயக் கைதியான பிரான்கோ பிரற்றின் கொலையில் எந்த தீவிரவாத அமைப்பும் சம்பந்தப்படவில்லை எனவும் இந்தக் கொலை - கொள்ளைக்கூட்டம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டதெனவும் தெரிவித்தார். அத்துடன் இத்தாலிய உயர் அதிகாரி ஒருவர் பணயக் கைதிகள் பிடிக்கப்பட்ட பிரதேசத்திற்கு சென்று அவர்களை விடுவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே - அமெரிக்க கம்பனி ஒன்றில் கடமை புரிந்த பாதுகாவலர்கள் கடந்த திங்கட்கிழமை கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.



துப்பாக்கிதாரிகள் மத்தியில் தமது கடவுச் சீட்டுகளை கையில் வைத்துக்கொண்டிருக்கும் காட்சி அல் ஜெசீராவில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

அத்துடன், கடத்திச் செல்லப்பட்டவர்களினால் எழுதப்பட்ட தகவல் ஒன்றும் ஒளிபரப்பப்பட்டிருந்தது. அந்தத் தகவலில் இத்தாலிய அரசுக்கு மூன்று நிபந்தனைகளை விதிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய மதத்தை அவமதித்ததற்கு பிரதமர் போர்லுஷ் கோணி மன்னிப்புக் கோரவேண்டும். இத்தாலிய துருப்புகள் ஈராக்கிலிருந்து வெளியேறவேண்டும். இத்தாலிய படையினால் கைதுசெய்யப்பட்டுள்ள மதத் தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அத்துடன் தடுத்துவைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் ஒவ்வொருவராக கொல்லப்படுவார்கள் எனவும் அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈராக்கில் உள்ள தமது நாட்டு பிரஜைகளை வெளியேறுமாறு சம்பந்தப்பட்ட நாடுகள் கேட்டுள்ளன.

ரஷ்ய அரசாங்கம் நேற்றும் இன்றும் ஈராக்கிலுள்ள 800 ரஷ்ய நாட்டு பிரஜைகளை விமானம் மூலம் தனது நாட்டிற்கு கொண்டு வரவுள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்கு காரணம் அங்கு நடக்கும் கடத்தல் பயமுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளது.

## தென்னாபிரிக்க தேர்தலில் தேசிய காங்கிரஸ் வெற்றி

தென்னாபிரிக்காவில் ஆளும் கட்சியான தேசிய காங்கிரஸ் மூன்றாவது தடவையாகவும் கூடிய அளவு வாக்கு வித்தியாசத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளது. இக் கட்சி கடந்த பத்து வருடமாக தென்னாபிரிக்காவில் ஆட்சியிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் இதுவரை 66 வீத வாக்குகளையும், எதிர்க் கட்சியான ஜனநாயக கூட்டணி 18 வீத வாக்குகளையும் பெற்றுள்ளது.

தேர்தல் முடிவுகள் சரிபார்க்கப்பட்டு மின்னியல் மூலம் தலைநகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பல தேர்தல் சாவடிகள் மேலதிக நேரம் வரை திறந்திருந்தன. வாக்காளர்களுக்கு இது மிகவும் வசதியாக இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. அத்துடன் வாக்களிப்பு சுமுகமாகவும், பிரச்சினைகள் இன்றியும் நடந்ததாக சுதந்திர தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா சுதந்திரம் அடைந்த தினமான ஏப்ரல் 27 இல் ஜனாதிபதி தபோ முபிகி பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார். தென்னாபிரிக்காவில் 80 வீதமானோர் கறுப்பினத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் 8 லட்சம் பேர் சுகயீனம் காரணமாக வாக்களிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட்டால்; தற்காலிக போர்நிறுத்தம் ஒன்றுக்குத் தயார்!

## பின்லேடன் ஒளிநாடாவில் தெரிவிப்பு



முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டால், தற்காலிக போர்நிறுத்தம் ஒன்றிற்கு தயாராக உள்ளதாக ஒஸாமா பின்லேடனால் வெளியிடப்பட்ட ஒளிநாடாவொன்றை இரு அராபிய தொலைக்காட்சி நிலையங்கள் ஒளிபரப்பியுள்ளன. ஆனாலும், இந்தப் போர் நிறுத்தம் அமெரிக்காவிற்கு உடன்பாடாக அமையாதெனவும் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பலஸ்தீன மதத் தலைவர் அகமட் சேக் யசீனின் கொலைக்கு இஸ்ரேல் பழிவாங்கப்படும் எனவும் போர்நிறுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்கள் வரையான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதெனவும், அதன் பின் அதனை நீடிக்கமுடியும் எனவும் ஒளிநாடாவில் பின்லேடன் தெரிவித்துள்ளார். கடைசி வெளிநாட்டு படைவீரன் முஸ்லிம் நாடுகளில் இருந்து வெளியேறியதும் போர் நிறுத்தம் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளினால் ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலடியாகவே ஸ்பெயின் மட்றிட் பகுதியில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனவும் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் இரத்தம் சிந்துவது நிறுத்தப்பட்டால் மாத்திமே முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமித்தவர்களின் இரத்தம் சிந்துவது நிறுத்தப்படும் எனவும் பின்லேடன் தெரிவித்திருந்தார்.

ஈராக்கில் வர்த்தக ரீதியான தமது நோக்கங்களை செயற்படுத்துவதற்காகவே போர் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதெனவும் குறிப்பாக அமெரிக்க கம்பனிகள் போர்த் தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கும் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் பணத்தை சம்பாதித்துக்கொள்வதற்குமாகவே இப்போர் உதவி வருவதாகவும் பின்லேடன் தெரிவித்தார்.




### சட்டவிரோதமாக செல்பவர்களைக் கட்டுப்படுத்த
## பிரிட்டன் புகையிரத நிலையமொன்றை பெல்ஜியம் எல்லைக்கு நகர்த்தவுள்ளது



பிரிட்டன் அரசாங்கம் பெல்ஜியம் பகுதியிலுள்ள புருஸ்லஸ் என்ற பகுதிக்கு தனது ரயில் போக்குவரத்து நிலையமொன்றை விஸ்தரிப்பதற்கான உடன்பாடொன்றை அந்த நாட்டு அரசுடன் நேற்று செய்துகொள்ளவிருந்தது.

2001 இல் பிரான்சுடன் செய்துகொண்ட உடன்படிக்கையினால் வாட்டலூ ஈரோஸ்ரார் நிலையத்தில் - கணிசமான அளவு சட்டவிரோதகாரர்கள் குறைக்கப்பட்டனர்.

மேற்படி உடன்படிக்கை பெல்ஜியத்துக்கும் இங்கிலாந்து குடிவரவு திணைக்களத்துக்கும் இடையே புருசெல் மத்திய யூரோஸ்ரார் நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதைப்பற்றி எல்லைப் பாதுகாப்பு பணிப்பாளர் டேவிட் ரொபேட் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறான நடவடிக்கைகள் மிகவும் வேண்டிய இடங்களுக்கே விஸ்தரிப்பு செய்வதாக கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2001 இல் பல நூற்றுக் கணக்கானவர்கள் அனுமதிப் பத்திரமின்றி ரயில் வண்டியில் வந்ததாகவும் அவர்கள் வாட்டலூ நிலையத்தின் குடிவரவு அதிகாரிகளால் புகைவண்டியில் நிறுத்தி வைத்திருந்ததாகவும் பின்பு அவர்கள் அகதி அந்தஸ்து கோரியதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது இதை 95 வீதமாக குறைத்துள்ளோம். இது பெரிய வெற்றி. இந்த வெற்றியை புருசெல்லுக்கு விஸ்தரிப்பதே எமது குறிக்கோள் எனவும் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து குடிவரவு அதிகாரிகள் ஏப்ரல் 2003 முதல் புருஸ்லஸ் மத்திய நிலையத்தை தமது கடமைக்கு கொண்டுவந்துள்ளனர். அத்துடன் பெல்ஜிய அதிகாரிகளுக்கு பயணிகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் கொடுத்ததாக தெரிவிக்கின்றார்.

# மத்திய கிழக்கின் சமாதான முயற்சி ஐ.நா. தீர்மானத்தை பின்பற்றவேண்டும்

## செயலர் கோபி அனான் தெரிவிப்பு

ஐ.நா. செயலாளர் கோபி அனான் மத்திய கிழக்கில் இஸ்ரேல் பங்குபற்றுகின்ற அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட திட்டத்தை வலியுறுத்தியுள்ளார்.

அனான் குறிப்பிடுகையில், மத்திய கிழக்கு நாடுகளின் சமாதானங்களும், பேச்சு வார்த்தைகளும் ஐ.நா. தீர்மானங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டுமென தனது கருத்தை இஸ்ரேல் ஜனாதிபதி ஏரியல் ஷரோனுக்கு தெளிவாகத் தெரிவித்தார்.

சில இஸ்ரேலியக் குடியேற்றங்களை காஸாவில் இருந்து அகற்றவும், சில பலஸ்தீன குடியேற்றங்களை பலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியில் தொடர்ந்து இருக்க செய்யவுமான தமது திட்டத்தை முன்வைத்தார்.

மேற்படி அனானின் திட்டத்தை வாஷிங்ரன் வரவேற்றவேளை பலஸ்தீனர்கள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

புஷ் - ஷரோன் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், எல்லா சம்பந்தப்பட்ட கட்சிகளும் சமாதானத்தை அரவணைப்பதன் பட்சத்தில் அதற்காக தமது சகல வாசல்களையும் திறப்பதாகவும் உலக வரலாற்றில் அதி நீண்டதான மத்திய கிழக்கு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் தான் விரும்புவதாகவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானமானதும், தெளிவான குடியாட்சியுள்ள பலஸ்தீனத்தையே அடைய இஸ்ரேலின் திட்டம் வழிவகுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதைப்பற்றி பலஸ்தீன அதிகாரிகள் மேற்படி திட்டம் ஆபத்தானதும், பிரச்சினையானதென்றும் தெரிவித்தனர்.

1967 ஆம் ஆண்டில் எல்லை வரைபின் அடிப்படையினை வைத்தே புதிய நகரத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் இதில் இரு பக்கங்களும் பங்குபற்றவேண்டும் என்றும் பலஸ்தீன அதிகாரிகள் வலியுறுத்தினர்.

1967 ஆம் ஆண்டின் எல்லை என்பது இஸ்ரேலிய தென் பலஸ்தீனத்தையும், காஸாவையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனபுள்ள எல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதைப்பற்றி பலஸ்தீன பிரதமர் அகமட் கூரே கருத்துத் தெரிவிக்கையில், புஷ் தமக்கு பலஸ்தீனர்கள்சார்பாக அதிகாரத்தை பயன்படுத்தும்படி கூறியிருந்தும் தாம் இதனை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ஜனாதிபதியே முதல்முறையாக பலஸ்தீனர்களின் குடியேற்றத்தை சட்டரீதியாக்கியதாகவும், ஆனால் இதுவரை பலஸ்தீன எல்லைகள் 1967 இன் எல்லைக்கு மீண்டும் போகவில்லை எனவும் தெரிவித்தார்.

அனானின் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில், சம்பந்தப்பட்ட கட்சிகள் தங்கள் நிலைப்பாடுகளை எடுத்து ஐ.நா செயலகத்தின் தீர்மானத்தை வலுப்படுத்துவார்கள் என தாம் நம்புவதாகவும் கூறினார்.

## வட கொரியா அணுத் திட்டங்களை அல்கொய்டாவிற்கு தெரிவிக்கலாம்!

### அமெரிக்க உப ஜனாதிபதி எச்சரிக்கை



வட கொரியா தனது அணுசக்தி தொடர்பான தொழில்நுட்பங்களை அல்கொய்டா போன்ற அமைப்புக்களுக்கு தெரிவிக்கலாமென அமெரிக்க உப ஜனாதிபதி டிக்செனி எச்சரித்துள்ளார். சீனாவில் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் உரை நிகழ்த்தும்போது, இவ்வாறு தெரிவித்தார்.

இதனால், வடகொரியாவின் பொயோங் யாங்கில் அமைந்துள்ள அணுசக்தி அமைப்பு தொடர்பான பிரச்சினையின் தீர்விற்கான பணிகளை தொடர்ந்து நடத்துமாறு சீனாவை உப ஜனாதிபதி டிக்செனி கேட்டுள்ளார். இது அப்பிரதேசத்தில் காணப்படும் சிக்கல் வாய்ந்த பிரச்சினை எனவும் தெரிவித்துள்ளார். வடகொரியாவின் அணு சக்தி திட்டங்கள் நிறுத்தப்படாதுவிடின், ஆசியப் பிராந்தியத்தில் அணு ஆயுதங்களின் பாவனை அதிகரிக்கலாமெனவும் எச்சரித்துள்ளார். பொயோங் யாங் அணு சக்தி அமைப்பின் கடந்தகாலம் பொறுப்புணர்வற்ற தன்மையையும் ஏமாற்றும் போக்கினையும் வெளிப்படுத்தி வந்துள்ளன எனவும் வட கிழக்கு ஆசியாவின் அமைதிக்கும் ஸ்திரத் தன்மைக்கும் இந்த அணு சக்தி அமைப்புக்கள் அகற்றப்படுதல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி அப்துல் கதீர் கான் வட கொரியாவிற்கு அணு சக்தி தொழில்நுட்பங்களை விற்றிருந்ததையும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வட கொரியா விற்கான விஜயமொன்றில் அணு சக்தி சாதனங்களை மறைவிடமொன்றில் காண நேர்ந்ததாக அணு விஞ்ஞானி குறிப்பிட்டிருந்ததையும் அமெரிக்க உப ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

மேலும், சீனாவின் தலைவர்கள் வடகொரியா அணு ஆயுதத் திட்டங்களை நிறுத்துவற்காக அந்த நாட்டுடன் மேற்கொள்ளும் பேச்சு வார்த்தைகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் முக்கிய கடப்பாடு!

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டில் சகல இனத்தவர்களும் ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழக்கூடிய சூழல் ஒன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் கடப்பாடு என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுக்காலை அளுத்கம விகாரையில் இடம்பெற்ற மத வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, அடிப்படை வசதிகள் பிரதி அமைச்சர் பேராசிரியர் வீரக்கோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# லெப்ரினன்கேணல் நீலனின் வித்துடல் விசுவமடு துயிலுமில்லத்தில் விதைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத் துறையின் உதவிப் பொறுப்பாளர் லெப்டினன் கேணல் நீலனின் வித்துடல் நேற்று விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

முன்னதாக இந்த மாவீரரின் வித்துடல் அவரது தற்காலிக முகவரியில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டு பின்னர் வீரவணக்க நிகழ்வுக்காக புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டு அங்கு இறுதி வணக்க கூட்டம் நடைபெற்றது.

நிகழ்வில் ஈகைச்சுடரினை தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைக்க லெப்டினட் கேணல் நீலனின் துணைவியார் வித்துடலுக்கான ஈகைச் சுடரினை ஏற்றி மலர் மாலையையும் அணிவித்தார்.

வித்துடல் பேழைக்கு லெப்டினட் கேணல் நீலனின் தாயார் மாலை அணிவித்தார். தொடர்ந்து வீர வணக்க உரையினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் மற்றும் போராளி மில்ரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மலர் வணக்கத்தைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வித்துடல் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது.

இதேவேளை - கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட உதவிப் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் லெப். கேணல் நீலனின் அஞ்சலி நிகழ்வும், வீரவணக்கக் கூட்டமும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இவரது சொந்த இடமான ஆரையம்பதிக்கு வித்துடல் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதன்போது - அந்தப் பகுதியிலிருந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டு வெள்ளைக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதன்பின்னர் - விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஒருவரான சேனாதி தலைமையில் வீரவணக்கக்கூட்டம் இடம் பெற்றது.

இதில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் குயிலின்பன், அம்பாறை மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளர் நெல்சன் மற்றும் ஆசிரியை புனிதா சுந்தரம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

இதன்பின்னர் - நேற்று முன்தினம் மாலை இவரது வித்துடல் வன்னிக்கு எடுத்துச்செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சபாநாயகரை தெரிவுசெய்யும்போது ஹெல உறுமய வெளிநடப்புச் செய்யும்

எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றத்தின் முதற் கூட்டத்தில் இடம் பெறவுள்ள சபாநாயகர் தெரிவின்போது, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கோ தாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்றும் தமது கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் தெரிவுக்காக வாக்கெடுப்பு நடைபெறும்போது சபையிலிருந்து வெளிநடப்புச் செய்யவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்தது.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட ஹெல உறுமய பேச்சாளர் ஒருவர்,

இரண்டு பிரதான கட்சிகளுமே சபாநாயகர் தெரிவின்போது தமக்கு ஆதரவளிக்குமாறு எம்மை அணுகின.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் அமைச்சர் டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டாரவை சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தத் தீர்மானித்துள்ளது.

அதேவேளை, அரசாங்கத்தின் சார்பில் கம்யூனிஸ்ட் கட்சியில் டி.ஈ. டபிள்யூ குணசேகர சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க இந்தப் பதவிக்கான வேட்பாளராக போட்டியிடவிருப்பதாக அரசாங்கம் கூறிய போதும்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இவரது பெயர் இடம்பெறாததால், நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

எமது ஆதரவு பௌத்த சிங்களவர் என்ற அடிப்படையிலேயே வழங்கமுடியும் எனத் தெரிவித்தார்.

# அமைச்சுப் பதவிகளை ஏற்க ஜே.வி.பியினர் இணங்கினர்!

## விரைவில் பதவியேற்பு

ஜே.வி.பியினர் தமது அமைச்சுப் பதவிகளை ஏற்கத் தயாரெனவும், விரைவில் இந்த அமைச்சுப் பொறுப்புக்களை அவர்கள் ஏற்கவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜே.வி.பியினர் தங்களால் ஒதுக்கப்பட்ட அமைச்சுப் பதவிகள் தமக்கு வழங்கப்படவேண்டுமெனக்கோரி அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதனைத் தவிர்த்து வந்தனர்.

ஆனால் தற்போது அநதப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பு தெரிவித்தது.

இதன்படி தற்போது மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சராக இருக்கும் சுசில் பிறேம ஜயந்தவிற்கு கல்வி உயர்கல்வி அமைச்சும், மகாவலி அமைச்சராக இருக்கும் மைத்திரிபால சிறிசேனவிற்கு மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சும் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் ஜே.வி.பியினர் கேட்ட மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த கருத்து முரண்பாடுகளை நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்தக்குழு தற்போது அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# லங்கா சமசமாஜக் கட்சியினது பொதுச்செயலாளர் பதவியிலிருந்து பட்டி வீரக்கோன் விலகினார்!

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் இராஜினாமாச் செய்துள்ளார்.

கட்சியின் மத்தியகுழு எடுத்த தீர்மானங்களிற்கு எதிராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதாலேயே தாம் தமது பதவியில் இருந்து இராஜினாமா செய்ததாக பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

எந்தவிதத்திலும் தங்களுடன் கலந்துரையாடாமல் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டுள்ள திஸ்ஸ விதாரண ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அமைச்சுப் பொறுப்பு ஒன்றை ஏற்றுள்ளார்.

இந்த நிலைமையில் கட்சியின் பொதுச் செயலாளராக தொடர்ந்தும் இருக்கமுடியாது. இதனால், இந்தப் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு தெரிவித்து தான் இந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக பட்டி வீரக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை, இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இது ஒரு உட்கட்சி விவகாரம் எனக் குறிப்பிட்டார்.

## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கருணா அணியினருக்கும் இடையே மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட மோதல் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனயாக நிவாரணங்கள் வழங்க ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் செயலகம் தெரிவித்துள்ளது.

# அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு குழுவொன்று அமைக்கப்பட்டது!

(கொழும்பு)

தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பினை திருத்தி அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா அரசியல் யாப்புக் குழுவொன்றை நியமித்துள்ளார்.

அரசியல் யாப்பு மறுசீரமைக்கப் படவேண்டிய முறைகள், மற்றும் அதன் அடிப்படை விடயங்கள் தொடர்பாக இந்தக் குழுவினால் விரிவாக ஆராயப்படவுள்ளதாக குழுவின் உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி சுபைர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் யாப்புத் திருத்தங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தை அரசியல் யாப்பு நிர்ணய சபையாக மாற்றி அரசியல் யாப்பை திருத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இது சட்டத்திற்கு முரணானது என்றும், அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாக தெளிவற்ற தன்மை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கருணாவுக்கு....

என்பது எமக்கு தெரியாது எனவும், பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கருணா கடந்த திங்கட்கிழமை இராணுவப் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

கருணாவும் மற்றும் 20 பேரும் பொலனறுவையிலிருந்து 6 இராணுவ வாகனங்களின் பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டதாக நேரில் கண்டோர் தெரிவித்ததாக இந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இவர்கள் இரவு 10 மணிக்கும், 11 மணிக்கும் இடையிலான நேரத்தில் தம்புள்ளயில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் இரவு ஆகாரம் உட்கொண்டதாகவும், அரசியல்வாதி ஒருவர் இவர்களுடன் வந்ததாகவும், இவர்கள் இரவு ஆகாரம் உட்கொண்டபோதே குறிப்பிட்ட விருந்தகத்தின் வரவேற்புக் கதவுகள் மூடப்பட்டிருந்ததாக ஆங்கில நாளிதழ் மேலும் தெரிவித்தது.

இதேவேளை, முரளிதரன் விநாயகமூர்த்தி எனப்படும் கருணா வெளிநாடு ஒன்றிற்கு சென்றமை தொடர்பாக எந்தவிதமான பதிவுகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## யுத்தநிறுத்த உடன்படிக்கையினை...

உள்ளிட்ட சிரேஷ்ட படையதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பு முழுமையாக வெற்றியளித்திருப்பதாக பிரிகேடியர் வஜிர விஜே குணவர்த்தன குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட மட்டு - அம்பாறை விசேட தளபதி கேணல் ரமேஷ் -

யுத்தநிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பும் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதென முடிவு செய்துள்ளோம்.

அத்துடன் எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் உடனுக்குடன் சந்தித்து தீர்வுகாண்பதென படைத் தரப்புடன் இணக்கம் காணப்பட்டிருக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை இது ஒரு சுமுகமான சந்திப்பாக அமைந்ததென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹெறாவ்டே தெரிவித்தார்.

அவர் சந்திப்பின் பின்னர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பு மிகவும் சாதகமான பின்னணியிலேயே இடம்பெற்றது. அத்துடன் முக்கிய விடயங்கள் குறித்து உடன்பாட்டுக்கு வந்துள்ளோம்.

விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான ஒத்துழைப்பைத் தொடர்வது என்றும்,

தற்போதைய ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உடனடியாக சமாதானப்...

பர் மாதம் 31 ஆம் திகதி முன்வைத்த தன்னாட்சி அதிகார வரைபை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்பதே தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும்.

இந்த நிலையில், ஜாதிக ஹெல உறுமயவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிப்பதானது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கப் போவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீட தலைவரான. ஜயதேவ உயன்கொட தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை வலுவிழக்கச்செய்ய வேண்டும் என தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் முயற்சிப்பது - சமாதானத்துக்கு மேலும் பாதகமான நிலையையே தோற்றுவிக்கும் என ஜயதேவ உயன்கொடவும், ஹரி குணதிலகவும் கருத்து வெளியிட்டனர்.

தமக்கு எதிரான பாரிய சவாலை குறுகிய காலத்துக்குள் முறியடித்து பிரபாகரன் மீண்டும் தமிழ் மக்கள் சார்பில் பேரம் பேசும் அதீத தகுதியை பெற்றுள்ளதாக ஜயதேவ உயன்கொட தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.